
5
வேடிக்கை
இருவார இதழ்
02-10-2005
ரூ. 30.00
பொங்குதமிழ் 2005
சிவாஜியில் அமிதாப்ஜி.
பொங்கு தமிழுக்கு
இன்னல் விளைந்திட்டேல்..
மண்ணுக்குள் ஒரு பாதை....

# வெடிக்கை

## இருவார இதழ்

கொண்டாட்டம் 01 கூத்து 05

சபலம்

குறுந்தகவல் குறுந்தொடர்கள்

சிவாஜியில்...

என் இரத்தத்தின் இரத்தங்களே...

பொங்குதமிழுக்கு
பலம் சேர்(ப்ப)த்தவை

காதல்

## நினையாதது நடந்தது!

## நிஜமாகவே காமாமுன் கண்ணீர்...

பூ ராசாரி...

பனிமலர்

வாரம் விட்டு வாரம் உங்கள் வாசல் வரும் வசந்தம்

## பொங்கு தமிழ் - பொங்கும் தமிழ்

30.09.2005.

தமிழ் மக்களின் வரலாற்றில் தன்னையும் திடமாகப்பதிவு செய்து கொண்டது. வவுனியாவில் திரண்டெழுந்த தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கும் உரிமைப் பிரகடனத்திற்கும் வலுச்சேர்க்கும் முகமாக யாழ் மண்ணில் பொங்குதமிழ் - 2005 எனும் மக்கள் புரட்சியாக உருவெடுத்தது.

ஐரோப்பிய நாடுகளுக்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பயணங்களிற்கு ஐரோப்பிய ஒன்றியம் பக்கசார்பான முறையில் தடை விதித்த பின்னனியில் இடம் பெற்ற இந் நிகழ்வானது சர்வதேச சமூகத்திற்கு தமிழர்தரப்பு நியாயத்தன்மைகளை ஓங்கி அடித்து உணர்த்தியிருக்கும்.


மூன்று லட்சத்திற்குமதிகமான மக்கள் திரண்டெழுந்து தமிழர்களின் உரிமைகளை கோரி நின்ற காட்சி நிச்சயம் சர்வதேசத்தின் நிலைப் பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பலாம்.

அவ்வாறில்லாவிடத்து, இந்த பொங்குதமிழ் பிரகடனத்தில் மக்கள் கூறிய போர் மூலமான உரிமை மீட்டலுக்கு அது வழிவகுக்கம். அபாயத்தையும் சர்வதேசம் உணர வேண்டும்.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் விதமான சிறிலங்கா அரசின் நிலைப்பாடானது அவர்களின் குறுகிய அதிகாரமையப் போட்டியை முன்னிறுத்தியே அமைந்திருக்கிறது. இந்நிலையில் ஒரு தீர்க்கமான, தெளிவான முடிவை சர்வதேசத்திற்கும் சிங்கள அரசிற்கும் **"பொங்குதமிழ் 2005"** எழுச்சிநிகழ்வின் மூலம் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழர்களுக்கான நியாயமான உரிமைகளை சிங்கள அரசு வழங்கவேண்டும். அல்லாதவிடத்து தமிழர்கள் தாமே தமது நடை முறையிலுள்ள அரசை நிலைநிறுத்த வேண்டும். போராடும் நிலைக்கு தள்ளப்படுவர் என்ற தமிழ் மக்களின் முடிவானது சிறிலங்கா அரசிற்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்கள் விடுக்கும் இறுதி எச்சரிக்கையாக கொள்ளலாம்.

# பொங்குதமிழ் 2005



தமிழர் உரிமைகள்,
தனித் தமிழ் நாடு
மக்கள் சக்தி
சுதந்திர வேட்கை
விடுதலைப் புலிகள்
ஈழத்தமிழர்
புலம்பெயர் தமிழர்

# வம்பன் பதில்கள்..

**வம்பா, உன்னைப்பற்றி உனக்கு நன்றாக தெரிந்த விடயமொன்று?**

அ. நிதர்சன், உசன்.

சிவனுக்கு முருகன், புத்தனுக்கு போதி, அர்ச்சுனனுக்கு கண்ணன் அடடா..., எனக்கு உங்கள் கேள்வி! எதுவும் எனக்கு தெரியாதென்பதை ஒருவரியில் புரியவைத்துவிட்டீர்கள்...!

**அமெரிக்காவின் அட்டூளியத்திற்கு இயற்கை அளிக்கும் பதில் திருப்திதருகிறதா?**

S.P. திருநாவுக்கரசு, நல்லூர்

கரீனா, ஒலினியா, ரீட்டா என அமெரிக்காவில் மையல் கொண்டு மையம் கொண்ட புயல்களில் சிக்கி சீரழிந்தது அமெரிக்க அதிகாரவர்க்கமல்ல, அப்பாவி பொதுமக்கள்தான். எய்தவனை விட்டு அம்பை நோவது போல் இயற்கையின் சீற்றம் திசைமாறிவிட்டது. ஆனானப்பட்ட அமெரிக்காவென்றால் கூட நிவாரணப்பணிகளில் அங்கும் ஊழல்தான்! பாரபட்சம்தான்!! அரசியல்தான்!!! ம்ம்ம்...வீட்டுக்கு வீடு வாசல்படி.

**வாழ்க்கையில் துன்பமே இல்லாமல் வாழ்வதற்கு என்ன செய்யலாம்?**

பா. ரிசாந்தினி, யாழ்ப்பாணம்.

நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும். துன்பமே வாழ்வில் இல்லாவிட்டால் அதுவே பெரும் துன்பமாய்ப் போய்விடும். இன்பங்களை விட துன்பங்களே வாழ்க்கையை சுவாரஸ்யமாக நடத்திச் செல்கின்றன. துன்பங்களை ரசிக்ககற்றுக் கொண்டவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிடுகிறான். உங்களுக்கு வெற்றி பெற விருப்பமில்லையா...........?



**"பொங்கு தமிழ்-2005" எப்படி?**

தி. வாசுகி, கொக்குவில்.

விமர்சனம் செய்ய அது ஒன்றும் கலை நிகழ்ச்சியில்லை. மக்கள் அலைப் பெயர்ச்சி. ஆனாலும் இங்கு பாராட்டவேண்டியமுக்கிய விடயம், எவருக்கெதிராக இந்த எழுச்சி இடம்பெற்றதோ அவர்கள் காத்த அமைதியும் புரிந்துணர்வும்தான். இது தமிழர்தரப்பு நியாயங்களை புரிந்துகொண்டதாலா அல்லது பொங்கிய மக்களின் எழுச்சியை கண்ட அச்சத்தாலா என்பதுதான் கேள்விக்குரியது.

**உபசரிக்கும் பண்பில் தமிழர்களை வெல்ல முடியுமா?**

சி. மதிவாணன், சங்கானை

....ம்ம், அதெல்லாம் அந்தக்காலம். இப்பவெல்லாம் ஆனந்தம் முடிஞ்சு முகூர்த்தம் பார்த்துதான் தேனீரே கிடைக்கிறது. கொஞ்சம் லோட்டானா கோலங்கள் போட்டு செல்வி மனைவியாகி கணவனுக்காக அழுதுபோட்டுதான் இரவுணவே கிடைக்கிறது. இந்த லட்சணத்தில் உபசரிப்பதில் தமிழரை வெல்ல முடியுமாவா? உங்களுக்கு ஒன்று தெரியுமா, போலந்து நாட்டின் எல்லா வீடுகளிலும் தொன்று தொட்டு ஒரு வழக்கம் இருந்து வருகிறது. அது, உணவு வேளைகளில் சாப்பாட்டு மேசையருகில் எப்போதும் ஒரு extra நாற்காலி கட்டாயம் வைத்திருப்பார்கள். முன் பின் தெரியாதவர் யாராவது வந்தால் கூட உணவருந்துவதற்காக.

**அந்நியனாக நீங்கள் இருந்தால் முதலில் யாரை தண்டிப்பீர்கள்? உங்கள் நிறுவனத்தின் இயக்குனரையா?**

வி. கதிரவன், அளவெட்டி

இல்லை, இல்லை... நான் அன்னியனானால் இயக்குனர் ரெமோவாகிவிடுவார். (அப்பாவி ஆசிரியர் தான் அம்பி ஹி....ஹி) நான் தண்டிக்கபோவது இளம் பெண்கள் சமுதாயத்தைதான்....(தலையும் நரைக்க தொடங்கிற்று, இன்னும் என்னை ஏறெடுத்து பார்க்காமல் அலட்சியப் படுத்துவதற்காக....)


**மெகா சீரியல் பார்க்கும் அம்மணிகளைப் பற்றி?**

S. ஷர்மிளா, நவாலி

இது மெகா சீரியல் பிரச்சினையில்லை. மெகாசீரியஸ் பிரச்சனை. ஐயா சுடுவான், உங்கள் நெற்றிக்கண்ணை இவர்கள் மேலும் கொஞ்சம் திருப்புங்கள்.

# A2Z COM.COM IT ZONE

**Point Pedro Road, Kodikamam.**



- Computer Education
- DTP Works
- Graphic Designing
- Photo, Video Editing
- Screen Printing
- Stationaries
- Internet Calls
- CD Writting & Sales

**We are with you For You**

# A2Z JOB AGENTS & MANPOWER CENTRE

**வேலையாட்களுக்கான தேவைப்பாடு**

**வேலையின்மை நிலைப்பாடு**

**இவை இரண்டுக்கும் ஒரு இணைப்புத் தீர்வு.**

**உங்கள் தேவைகளுக்காக நாங்கள் இருக்கிறோம்.**



அழையுங்கள்:

0777 447 969

எமது முகவரி :

பஸ் நிலைய அருகாமை,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

# வடுக்கள்

விளக்கிற்கு திரி போல
என் உயிரின்
பிரகாசமானது நட்பு!
உண்ண மறந்தாலும்
நினைக்க மறவாத
செல்லச் சிட்டுக்களாக,
கூடித் திரிந்த
சொர்க்க அனுபவம்
தந்தது நட்பு!
அன்பு காட்டிய போதெல்லாம்
அரவணைத்து,
பாசம் வைத்த போதெல்லாம்
வாரியெடுத்து,
புன்னகை வதனத்தோடு
சிந்திக்காது செய்றப்பட்டவர்கள்
புத்தி சொன்ன போது மட்டும்
புரிந்து கொள்ளவில்லை..!!!
அதனால்,
சிந்தனைகள் மாறுபட்டு
சின்னாபின்னமாகியது நட்பு!
காதல் பிசாசு
அவர்களது மனவிழிகளை
மறைத்திருக்க வேண்டும்...
ஈரேழு பாதங்கள்
கூடித்திரிந்த வீதிகளெல்லாம்
ஓரிருவரை மட்டும் சுமந்து
சுருதியற்றுக் கிடக்கிறது...
அகத்தின் சோகத்தை
முகத்தில் கண்டு
ஆறுதல் சொல்ல,
அரவணைத்த நொடிகளை
இன்றும் எண்ணிப் பார்க்கிறேன்...!
எனினும்,
ஒருவரின் மன ஆழத்தைக் கூட
அறிந்து கொள்ள முடியாத
அவமானத்தை சுமந்து
இன்று,
நடைப்பிணமாகி நிற்கின்றேன்..!
நட்பில் நான் வைத்த
பற்றும் பிரியமும்,
திடமான என்மனதை
ரணமாக்கிச் சுமையானது...!!!

-சுவாதி
மல்லாவி.

# நிழல்

அவளிடம்,
'ஏன்?
நிழலாய் இருக்கின்றாய்
நிஜமாய் இரு'
என்றேன்!
அவள்
மறுத்து விட்டாள்!
ஏன்...என்ற
என் வினாவிற்கு,
'நிழலாய் தான்
இருப்பேன்
நீ வந்து
ஒதுங்குவதற்காக....'
என்றாள்...!!!

-ஆரபி
உடுப்பிட்டி

# ஜோதிடமா ஜோசனையா...

பாண்டிய மன்னர் சுற்றுலா பயணமாக தமது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பயணப் பட்டுட்டிருந்தார். ஒருநாள், ஒரு ஊர் அருகே கூடாரம் அடித்து, மன்னர் தங்கியிருந்தார்.

அந்த ஊர்ல ஒரு பிரபல ஜோதிடர் இருப்பதாகவும், அவரது ஜோதிடத்தில் மக்கள் அபார நம்பிக்கை வைத்திருப்பதாகவும், மன்னருக்கு சேதி கிட்ட, உடனே, ஜோதிடரை மன்னர் வரவழைச்சாரு. மன்னராச்சே...

ஒரு குறுகுறுப்பான புன்னகை யோட, உம்மைப் பற்றி இந்த வட்டாரத்தில் பிரபலமாக சொல்ல ப்படுகிறது. உமது ஜோதிடத் திற மையை சோதித்தறிய விரும்பு கிறேன்னர்.

ஜோதிடருக்கு வியர்த்துச்சு.

தொடர்ந்து மன்னர், இந்தக் கூடாரத்தில் முன்பக்க வாசல் பின்பக்க வாசல் இரண்டு மட்டுமே உள்ளது. நாளைக் காலை நான் எந்த வாசல் வழியாக வெளியேறுவேன் என்று உங்கள் ஜோதிடத்தில் கணித்து எழுதி சீல் வைத்து விடுங்கள்.

நான் நாளைக் காலை வெளியே வந்த பின் நீங்கள் எழுதி வைத்ததை பார்ப்பேன். சரியாக இருந்தால், பெரிய பரிசு தருகிறேன். தவறாக இருந்தால், தண்டனை உறுதின்னுட்டாரு.

ஜோதிடர் பயந்துட்டே, தலையாட்டிட்டு ரொம்ப நேரம் யோசனை செய்து தன்னோட கணிப்பை எழுதி சீல் வச்சு குடுத்துட்டுப் போனாரு.

மறுநாள் காலை மன்னர் எழுந்து, சிறிது நேரம் யோசித்தார். முன்பக்கம், பின்பக்கம் இரண்டையும் தவிர்த் துவிட்டு, தன்னோட வாளாலே கூடாரத்தின் தடுப்புப் பகுதியை கிழித்து வெளியேறினாரு.

**-வாசுகி**

பிறகு... ஜோதிடரின் கணிப்பு அடங்கி மடலை பிரித்துப் பார்த்தார். அதிர்ச்சி.

அதுல, மன்னரே! நீர் முன்பக்க வாசல், பின்பக்க வாசல் இரண்டையும் தவிர்த்து, குறுக்கு வழியாக வெளியேறுவீர்ன்னு இருந்தது.

மன்னருக்கு ஆச்சர்யம்.

ஜோதிடரை பாராட்டி பரிசு கொடுத்திட்டு, எப்படி இவ்வளவு சரியாக கணித்தீர்னு கேட்க,

ஜோதிடர், மன்னா! சோதிப்பது என்று நீங்கள் தீர்மானித்த பின், நேர் வழியை விட்டு, என்னை மடக்குவதற்காக குறுக்கு வழியை நேர்ந்தெடுப்பீர்கள்னு எதிராளியான உங்களை மனோதத்துவ ரீதியாக முடிவு செய்தேன்னு சொன்னார் அந்த புத்திசாலி ஜோதிடர்.

சிறுகதை

# பீனிக்ஸ் பறவை

-முகிலன்

கொழும்பிலிருந்து வந்த 'கபிலன் ரவல்ஸ்' பேருந்து வவுனியாவுக்குள் நுழைந்ததுமே பிரத்யேகமாய் அடிக்கும் தமிழ் வாசனை மனதை துருத்தி தூக்கத்தை துரத்தியது. நன்றாக இழுத்து சுவாசித்தேன்.

சிறு வயதில் உடல் நிலை சரியில்லையென்றால் மருத்துவரிடம் போக அப்பா என் கிராமத்தில் இருந்து என்னை இங்கு அழைத்து வருவார். அப்பொழுதில் இருந்தே எனக்கும் இந்த நகருக்கும் நல்ல சினேகம்.

"அப்பா! தாத்தா பாட்டி வீட்டுக்குப் போக எவ்வளவு நேரம் ஆகும்? " என் மகள் வினயா கேட்டாள்.

என் சொந்தக் கிராமத்திற்குச் செல்லவே பேருந்து எப்பொழுது வரும் என எனக்குத் தெரியாததால் விசாரித்துச் சொல்கிறேன் என்றேன்.

வவுனியாவும் நன்கு பரிச்சயமான ஊர்தான் என்றாலும் நான் ஊரை விட்டுச் சென்று 15 ஆண்டுகள் ஆகி விட்டதால் ஊரின் அமைப்பு மாறிப் போயிருந்ததில் ஒன்றும் பிடிபடவில்லை. என் ஊர் செல்லும் பேருந்து வந்ததும் ஏறி அமர்ந்து கொண்டோம்.

பொட்டல் வெளிகளும் தரிசு நிலங்களும் நிறைந்ததுதான் என் ஊர்ப் பக்கம். "நாளை மழை பெய்யும்" என்ற நம்பிக்கைதான் வாழ்க்கையாய் வாழும் மனிதர்கள் உள்ள பூமி! அந்தக் கரடு முரடான சாலையில் ஓட்டுனரின் அதீத திறமையால் மட்டுமே 18 கி.மீ தூரம் உள்ள என் ஊரை 1 மணி நேரத்தில் சென்றடைய முடியும்.

சிறு வயது நினைவுகள் வந்து எனை அவ்வப்பொழுது தாலாட்டுவதுண்டு. ஆனால் இன்று என் மகளோடு நானும் குழந்தையாகிக் குதூகலித்துக் கொண்டிருந்தேன். என் முக மாறுதல்கள் கண்ட என் மனைவி என்னை வியப்போடு பார்த்ததில் எனக்கு அசாதாரணமாகத் தோன்றவில்லை. பாவம் அவளுக்கு என் மனதின் ஓட்டங்கள் புரிந்திருக்க வாய்ப்பில்லை.

"என்னங்க ஊர் வந்திட்டது" என எழுப்பினாள் என் மனைவி.

பேருந்து விட்டு இறங்கியதும் அப்பாவைத் தேடினேன். கூட ஒரு வாலிபனை அழைத்து வந்திருந்தார். எங்கள் சுமைகளை வாங்கிக் கொள்ளவாம். சரியென்று பொருட்களை அவனிடம் கொடுத்து விட்டு அவன் பெயர் கேட்டேன். 'முத்துவேல்' என்றான். வினயாவை தூக்கிக் கொண்டே அப்பா எங்களை வரவேற்றார். ஊரின் மாற்றங்களைக் கவனித்தேன். புதிது புதிதாக டிஷ் ஆண்டனாக்கள் வீடுகளில் முளைத்து இருந்தன. ஊரின் நடுவில் ஒரு பெரிய தண்ணீர்த் தேக்கத் தொட்டி 'வீரநாரிக்குளம் குடி நீர்த் திட்டம்' என்ற பெயருடன் நின்றிருந்தது. ஓலைக்கூரை வீடுகள் ஒன்று கூட இல்லை.

தெருக்கள் சிமெண்ட் பூச்சுத்தரையாய் இருந்தன. வீடுகள் கூட மாறிப் போயிருந்தன. சித்தப்பா, மாமா, அத்தை என எல்லோரையும் பற்றி விசாரித்துக் கொண்டே வந்தேன்.

"நம்ம ஊரு இப்போ ரொம்ப மாறிடுச்சு போலத் தெரியுது மாமா" என ஆச்சர்யப் பட்டுக்கொண்டே கேட்டாள் என் மனைவி.

"ஆமாம்மா! முன்ன விட இப்போ நிறைய வசதிகள் வந்திட்டது" என்றார் அப்பா.

வரும் வழி நெடுக விசாரிப்புகள். 'எப்போ வந்தே?'. இப்பொழுதுதான் பேருந்தில் இருந்து இறங்கி வந்ததைப் பார்த்தாலும் "நல்லா இருக்கியா?" என்பதன் மாற்றாக எங்கள் ஊரில் வழங்கப்படும் ஒரு சொற்றொடர் அது. ரொம்ப முக்கியமான சொற்றொடரும் கூட! "எப்போ வந்தீன்னு ஒரு வார்த்தை கேக்கக்காணம்!" என்று பெரும்பாலான பெண்கள், வேறு ஊர் செல்லும் போது உறவினர்கள் தங்களைக் கண்டு கொள்ளாமை பற்றி அங்கலாய்த்துக் கொள்வார்கள்.

"இப்போதான்", என அனைவருக்கும் பதில் கூறிக் கொண்டே வந்தேன். ஊர் சிறிய ஊர் என்பதால் அனைவரும் முறை வைத்து அழைப்பது வழக்கம். அதனால் கூப்பிடுபவருக்குத் தகுந்தாற் போல 'இப்போதான் அத்தை', 'இப்போ தான் மாமா', 'பெரியம்மா' எனக் கூறிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

வீடு வந்ததும் ஆரத்தழுவி அம்மா வரவேற்றாள். மருமகளையுந்தான். அவர்கள் இருவரும் தூரமாக இருப்ப தாலோ என்னவோ என் மனைவிக்கும், அம்மாவிற்கும் இடையில் மாமியார் மருமகள் சண்டை வந்ததே இல்லை. அத்தோடு மட்டுமில்லாமல் என் மனைவி மிகச் சாந்தமானவளுங்கூட.

குளித்து சாப்பிட்டவுடன் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என முத்துவேலுவை அழைத்தேன்.

வினயா, "அப்பா நானும் வருவேன்" எனத் தொற்றிக் கொண்டாள். முத்து வேலுவுடன் குளக் கரைக்குச் செல்லும் வழியில் இன்னும் பல விசாரிப்புகள், "ஆளே மாறிப் போயிட்டியப்பா" எனவும், "அவங்க தாத்தா போல நல்லா ஓங்கு தாங்கா வளர்ந்திருக்கான்" என்றும் பல விமர்சனங்கள்.

ஊரின் மாற்றங்கள் இன்னும் பிரமிக்க வைக்கக்கூடிய அளவில் இருந்தது. சந்தோஷப் பட்டுக்கொண் டேன்.

"என்ன படிச்சிருக்கே முத்துவேல்" என்றேன்.

"பத்தாவதுங்க! அதுக்கப்புறம் ஆச்சி பள்ளிக்கூடம் போனது போதும்னுருச்சி, அதான் உங்கப்பாகிட்ட வேலைக்குச் சேந்துட்டேன்" என்றான். அவன் ஆச்சியென்றது அவன் அம்மாவைத் தான். எங்க ஊர் வழக்கம் அது.

குளக்கரையில் பட்டாம் பூச்சிகளைக் கண்டதும் வினயாவின் குதூகலத்திற்கு அளவேயில்லாமல் இருந்தது. முத்துவேல் அவற்றைப் பிடித்துக் கொடுத்தான். வினயாவுக்கு இது போதாதா, நன்கு ஒட்டிக் கொண்டாள்.

நீண்ட நாள் கழித்து ஊரைப் பார்த்ததில் மனது நிறைந்திருந்தது. இங்கேயே தங்கி விட மனது துடித்தது.

வீடு திரும்பினால் சிறு கூட்டம். எல்லாம் உறவினர்கள்தான்.

"என்ன தம்பி ஊரெல்லாம் எப்படி இருக்கு" என்று அன்போடு விசாரித்தனர்.

"இங்கேயே தங்கலாம்னு இருக்கேன்" எனச் சொன்னதும் அம்மாவிற்குச் சந்தோஷம்.

என் மனைவி குழப்பத்துடன் பார்த்தாள்.

வந்திருந்த கூட்டத்தில் வினயா வயதை விட ஒரு 2



வருடம் மூத்த பருவமுடைய பையன் ஒருவனும் இருந்தான்.

"டே சுரேஷ்! பாப்பாவைச் சேர்த்துகிட்டு விளையாடப் போ" என அப்பா அந்த சிறுவனிடம் கூறினார்.

வினயாவும் அவனுடன் விளையாடச் சென்றாள்.

"என்ன இது கையில" என்றான்.

"இது பட்டாம் பூச்சி! முத்துவேல் மாமா பிடிச்சிக் கொடுத்தாங்க" என்றாள் வினயா.

"எந்த முத்துவேல் மாமா" –இது சுரேஷ், அந்த சிறுவன் தான்.

"அதோ அங்க இருக்காரே! அவருதான்" என

முத்துவேலுவைக் காட்டினாள் என் மகள்!அதைக் கேட்ட சுரேஷோ சிரிக்க ஆரம்பித்துவிட்டான். "அது முத்துவேலு, முத்துவேல் மாமா எல்லாம் இல்லை" என்றான்.

"அய்யோ, வயசில மூத்தவங்களை மாமான்னுதான் சொல்லனும்னு எங்கப்பா சொல்லி இருக்காங்க" –இது வினயா.

"அவனை எல்லாம் மாமானு சொல்லக் கூடாதுனு எங்கப்பா சொல்லி இருக்காங்க ஏன்னா அவன் கீழ் சாதி" என்றவன் "ஏ! முத்துவேலு" என்றான்.

சுரேஷின் சத்தம் கேட்டு "என்னங்க கூப்பிட்டீங்களா?" என்று ஓடோடி வந்தான் அந்த 20 வயது வாலிபன். பார்த்துக் கொண்டிருந்த எனக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

எல்லோரும் போன பின் என் மனைவியப் பார்த்து "நாளை ஊருக்குக் கிளம்புகிறோம் எடுத்து வை" என்றேன். இப்பொழுதும் குழப்பத்துடனேயே என்னைப் பார்த்தாள் என் மனைவி.

அம்மாவும் கூட "ஏண்டா" என்றாள்.

பல அறிவியல் மாற்றங்கள் வந்தும், பல அறிஞர்கள், பண்பாளர்கள் எனப் பலருங் கூடி அழிக்க முற்பட்ட சாதி மட்டும் இன்னும் ஃபீனிக்ஸ் பறவையாய் மீண்டும் மீண்டும் எழுவதை எப்படிப் புரிய வைப்பேன் எனக் குழப்பத்தில் இருந்தேன்.

"சாதின்னா என்ன தாத்தா? ஏன் முத்துவேல் மாமாவை மாமானு சொல்லக் கூடாது" என்று வினயா கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியா விட்டாலும் நாம் இந்த ஊரில் இருந்தால் வினயா எதிர் நோக்கப் போகும் பயங்கரம் அறிந்து, எனது மாற்றத்திற்கான காரணம் புரிந்து எங்கள் பயணத்திற்கான ஆயத்த வேலைக்குத் தயாரானார் என் அப்பா. அம்மாவும் தான். என் மனைவி மட்டும் வழக்கம் போல குழம்பிக் கொண்டே என் தோளில் வந்து சாய்ந்தாள்.

கற்பனையல்ல..

---

# *Cold Fusion*

அணுப்பிளவைப் (Nuclear Fission) பற்றி பலருக்கும் தெரியும். 'ஹிரோஷிமா, நகசாகி நகரங்களின் பேரழிவிற்கும் அணுமின் நிலையங்களில் ஆக்கபூர்வ சக்தி உற்பத்திக்கும் அணுப்பிளவுதான் அடிப்படை. மாபெரும் அணுவின் பொருண்மைக்கும் (m0) அதைப் பிளக்கும்பொழுது உருவாகும் சிறு அணுக்களின் கூடுதல் பொருண்மைக்கும் (m1 + m2) இடையே உள்ள சக்தியின் வேறுபாட்டுக்கு நேர்விகிதத்தில் சக்தி தோன்றுகிறது. இதையே ஐன்ஸ்டைனின் $E = mc^2$ என்ற சமன்பாடு கணக்கிடுகிறது. அணுப்பிளவில் சக்தியுடன் கூட பக்கவிளைவாகக் கதிரியக்கம், வெப்பக்கதிர்வீச்சு போன்றவையும் நிகழ்கின்றன. இவற்றினால் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் ஏற்படும் பக்கவிளைவு அதிகம்.

# இளம் பத்திரியையாளர் 2005
## பயிற்சித்திட்டம்

*இளையவர்களே,*

உங்கள் திறமையை மெருகேற்றவும் அரங்கேற்றவும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

எமது பிரதேச இளைஞர்களிடையே புதைந்திருக்கும் ஆற்றல்களை பயனுள்ள வழியில் வெளிக்கொண்டு வரவும் அவர்களின் சமூக, இலக்கிய அக்கறையை பிரதிபலிக்கவும் எமது இருவார இதழ் **"இளம் பத்திரியையாளர் பயிற்சித்திட்டம் - 2005"** எனும் செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் பயிற்சியாளர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு எமது பத்திரிகையில் பயிற்சி நிருபர்களாகவும் படைப்பாளிகளாகவும் பங்குகொள்ள முடியும்.

**நிபந்தனைகள்:-** 25 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். பத்திரிகையில் அல்லது கலைத் துறையில் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.

உங்கள் சுயவிபரக் கோவையுடன் சுயவிலாசமிட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையுடன் உங்களின் சுய ஆக்கம் ஒன்றையும் நிழற்படம் ஒன்றையும் சேர்த்து விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 30.10.2005

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**"இளம் பத்திரிகையாளர் பயிற்சித்திட்டம் - 2005"**

**வேடிக்கை**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

பத்திரிகையாளர்கள் - எழுதுகோல் ஏந்திய போராளிகள்.....!

வேடிக்கை வேகம் கொண்டு சொல்லும் வேதம்

நாடிக்கை நீட்டிடுவோர் தம்முள் இல்லை பேதம்



# ஏன் இரத்தத்தின் இரத்தங்களே!...

-கசநோவா-

இது ஒன்றும் ஒரு அரசியல்வாதியின் தேர்தல் பிரச்சார பசப்பு வார்த்தையல்ல. உங்களிடம் தங்களின் உயிரைக்காக்குமாறு ஏங்கிநிற்கும் ஏதிலிகளின் உணர்ச்சிக் குரல். ஆம், உங்களின் இரத்தத்தில் சிறிது தானம் கேட்டு சாதி, மதம், இனம், குலம், வயது, பால், உயர்வு, தாழ்ச்சி பாராது வாடிநிற்கும் எங்களின் சகோதரர்களின் குரல். தமது விடுதலைக்காய் ஒன்றுபட்டுப் போராடும் ஒரு சமூகத்தில் இந்தக்குரல் இன்னும் ஓங்கியொலிப்பது வேதனைக்குரியது. எமது இலங்கையின் தென்பகுதியில் உள்ள குருதித்தேவையில் 90% ஆனது தானாக முன்வந்து குருதி வழங்கும் ''குருதிக்கொடையாளர்'' களால் பூர்த்தி செய்யப்படுகிறது. ஆனால் எமது வடபகுதியிலோ ஆக 39% மட்டுமே அத்தகைய குருதிக் கொடையாளர்களால் பூர்த்தி செய்யப்படுகிறது. இதற்கு காரணம் இன்றும் எமது மக்களிடையே குருதி வழங்குதல் தொடர்பான விழிப்புணர்வு போதாமையும் மனப்பாங்கு விருத்தியின்மையுமே ஆகும்.

இறைவனின் படைப்பிலே நாம் அனைவரும் சமமே என்றாலும் ஒரு சிலரிலே சில குறைபாடுகளையும் இறைவன் படைத்துவிடுகிறான். அவற்றில் ஒன்றுதான் சிலரின் குருதியில் ஏற்படும் குறைபாடு. அக்குறைபாடு உள்ளவர்கள் மற்றவர்களின் குருதியில் தங்கிவாழவேண்டியவர்களாகவுள்ளனர். அப்படி குருதித் தேவையுள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காகவே இறைவன் எமது உடலில் போதுமான அளவு குருதியைப் படைத்துள்ளான்.

எமது ஒவ்வொருவரின் உடலிலும் ஒவ்வொரு கிலோகிராமுக்கும் (kg) 70ml குருதி உண்டு. உதாரணமாக 60kg நிறையுடைய ஒருவரில் அண்ணளவாக 4200ml குருதியுண்டு. ஆரோக்கியமான ஒருவரில் குருதி திரும்பத்திரும்ப மீளப்புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். நாங்கள் ஒரு தடவை இரத்ததானம் செய்யும் பொழுது எமது உடலிலிருந்து 450ml குருதி இழக்கப்படுகிறது. இதனால் எமது உடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இரண்டு வாரங்களுக்குள் முழுமையாக பதிலீடு செய்யப்பட்டுவிடும். உண்மையில் இரத்ததானம் ஒருவரை மேலும் ஆரோக்கியமுள்ளவராக்குகிறது எனலாம். ஏனெனில் ஒருவர் இரத்ததானம் செய்யமுன்பு அவர் வைத்தியரினால் பரிசோதிக்கப்படுகின்றார். அவரது

ஆரோக்கியம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் குருதி வழங்க அனுமதிக்கப்படுகிறார். அவரது குருதி பின்னர் மற்றொருவருக்கு வழங்கப்படும் போதும் குருதி தொடர்பான நோய்கள் ஆன AIDS, ஈரலழற்சி(Hepatitis B), மலேரியா என்பவற்றுக்குப் பரிசோதிக்கப்பட்டே வழங்கப்படுகிறது. அதனால் ஒருவர் குருதிக் கொடையாளராகவுள்ளர் எனில் அவரது ஆரோக்கியம் உறுதியானது எனலாம்


**ஒருவர் குருதிக் கொடையாளராகவுள்ளார் எனில் அவரது ஆரோக்கியம் உறுதியானது எனலாம்.**

ஒருவரின் குருதியானது இரத்த வங்கியில் ஆகக்கூடியது 35 நாட்களுக்கு பேணக் கூடியதாகவுள்ளது. விஞ்ஞானத்தில் எத்தனையோ கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ள மனிதனுக்கு தனது குருதியைப் போன்ற ஒரு பாய்மத்தை உருவாக்க முடியாதுள்ளமை பெரும் சவாலாகவேயுள்ளது. அதனால் குருதித்தேவை மேலும் அதிகரித்தே செல்கிறது.

எமது நாட்டில் 18 வயதிற்கு மேற்பட்ட 50kg நிறைக்கு மேற்பட்ட அனைவரும் குருதி வழங்கத் தகுதியுடையவர்கள். எமது நாட்டில் பணத்திற்கு குருதி வழங்குதல் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு தடவை குருதி வழங்கியவர் 3 மாதங்களில் அடுத்த குருதி வழங்கலைச் செய்யலாம். எமது போதனா வைத்தியசாலையில் ஒருவருக்கு குருதி தேவைப்படும் போது அவர் குருதிகொடையாளராக இல்லாதவிடத்து அவரது உறவினரிடமிருந்து குருதி பெறப்படுகின்றது. இங்கு நிலவும் குருதிப்பற்றாக்குறையே இந்நிலைக்குக் காரணம். இந்நிலை மாறவேண்டுமானால் குருதிக்கொடையாளர்களை அதிகரிப்பதே ஒரே வழியாகும். நாம் ஒவ்வொருவரும் குருதிக் கொடையாளர்களாக மாறவேண்டும். ஆகக்குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு தடவையாவது குருதிவழங்குதலை வாடிக்கையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

"எமது உடலில் இருந்து சிந்தும் ஒவ்வொரு துளியும் பெறுமதியானது தான் ஆனால் அதுவே மற்றவர்களுக்காச் சிந்தப்படும் போது அது விலை மதிக்கமுடியாததாகிறது."

**குருதிக் கொடை உயிர் காக்கும்**



# சுனாமிப் பேரலை

அலையே நீ அமைதியாக இருந்ததன் நோக்கம் யாதோ?
2004ஆம் ஆண்டு மக்களை இவ்வாறு அலையவிடத்தானோ?
மக்களுக்கு அள்ளி வாரிக் கொடுக்கும் கடலே,
நீயே மக்களை சீறி விழுங்கினாயோ....?

துள்ளி விளையாடிய சிறுவர்கள் தூக்கத்தில் இறையடிசேர -
அதை,
ஆதரித்த இறைவன் கூட உன்னை அடக்கவில்லையா?
உன் கோபம் இவ்வளவு கொடூரமானதா - இல்லை
உன்னைத் தாங்கும் இப் பூமி கொடூரமானதா..?

கடலுக்குள் இருந்த அமைதிப் புயலே - நீ
நாட்டுக்கள் வந்து விட்டாய்....!
காணுவது நனவா இல்லை கனவா என நினைக்குமுன்னே
கடலுக்குள் இழுத்து விட்டாய்....!

இவ்வளவு நாளும் ஆதரித்தது உன் பசிக்கு இரையாக்கவா...?
இல்லை எம்மை பசியில் வாடவைக்கவா...?
இனியிப்படி கொடூரம் வராதென எம்மிடம் சபதம் செய்...!
இழப்பின் வடுக்கள் மாற்றி இதயம் மீளச் செய்...!!!



கு. கிறூபிகன்.

# உலகிலேயே மிக நீளமான குகைப்பாதை

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மலைகளையும், இரு மலைகளுக்கு இடையேயுள்ள குறுகலான கடல்களையும் பார்க்க வேண்டுமா? வாருங்கள் மேற்கு நோர்வேக்கு! காணும் காட்சியில் உங்கள் உள்ளத்தைப் பறிகொடுப்பீர்கள்! அத்துடன் வளைந்து நெளிந்து செல்லும் குறுகலான சாலைகளும், பல குகை பாதைகளும் மனிதனின் அறிவுத் திறமைக்கு அத்தாட்சி அளிக்கின்றன. சமீபத்தில் ஒரு புதிய குகைப் பாதை கட்டி முடிக்கப் பட்டது. அது எந்தக் குகை பாதையையும் மிஞ்சி நிற்கும் எஞ்சினியரின் சாதனை! அது லேர்டால் குகை பாதை. உலகிலே யே மிக நீளமான குகை பாதை உறுதியான பாறையைக் குடைந்து உருவாக்க ப்பட்ட 24.5 கிலோ மீட்டா துார குகை நெடுஞ்சாலை. வாகனமொன்றில் இந்த குகை பாதையின் வாயிலில் நுழைவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். சில நிமிட துாரத்தைக் கடந்தபின், உங்கள் தலைகளு மேல் 1,000 மீட்டருக்கும் அதிக உயரத்திற்கு மலை இருக்கிறது.!



இப்படிப்பட்ட நீளமான குகை பாதை ஏன் தேவைப்பட்டது? நோர்வேயின் இரண்டு பெரிய நகரங்களான ஒஸ்லோவையும் (தலைநகர்,கிழக்கில் அமைந்துள்ளது), பெர்கனையும்(மேற்கு கடற்கரை யோரத்தில் அமைந்துள்ளது) இணைக்கும் சாலையில் இது முக்கிய பகுதியாகும்.

இவ்விரண்டு நகரங்களுக்கும் இடையே அமைந்துள்ள மற்ற மலைப் பாதைகள் குளிர்கால பனியாலும் காற்றாலும் பயணத்தை கடினமாக்கு கின்றன. ஆகவே ஒரு புதிய

மார்க்கத்தை, மோசமான வானிலை யிலும் சிரமமின்றி பயணிக்க முடிந்த ஒரு மார்க்கத்தை அமைப்பது மிகவும் அவசியமாக இருந்தது. இந்தப் புதிய நெடுஞ்சாலையில் ஆர்லாண்டு, லேர்டால் என்ற சிறிய மாவட்டங்க ளுக்கு இடையே ஒரு குகைப்பாதை யை அமைக்கவும் 1992-ல் நோர்வே நாட்டு நாடாளுமன்றம் தீர்மானித்தது. ஐந்தாண்டு கால கட்டுமான பணிக்கப் பிறகு, இந்தக் குகைப்பாதை நொவம்பர் 2000-ல் அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. இந்த சாதனை படைக்கப்பட்டது எவ்வாறு? இந்த குகை பாதை எந்தளவுக்கு பாதுகாப்பானது? இதன் வழியே வாகனத்தை ஓட்டிச்செல்வது எப்படி இருக்கும்?

நாம் கண்டறிவோம்.

**கட்டுவதில் சிக்கல்கள்**

லேர்டால்லையும் ஆர்லாண்டையும் இந்த குகை பாதை இணைக்கிறது. ஆனால் இப்பாதையை அமைத்த பணியாளர்கள் மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் வேலையை ஆரம்பித்தனர். இரண்டு முனைகளிலி ருந்து இரண்டு குழுக்கள் வேலையை தொடங்கின. அதே சமயத்தில் மூன்றாவது குழு ஒன்று, லேர்டால் முனையிலருந்து 6.5 கிலோமீட்டர் தூரத்தில் மெயின் குகை பாதையில் வேலையை தொடங்கியது. அப்பா தையின் நீளம் 2 கிலோமீட்டர். மலையின் உட்புறத்தில் ஒன்றை யொன்று சந்திக்கும் நம்பிக்கையில் இந்த மூன்று குழுக்களும் எவ்வாறு ஒத்திசைந்து மலையைக் குடைவதில் செயல் பட முடிந்தது? ஒவ்வொரு குழுவும் பணியைத் தொடங்குவதற்க ான சரியான இடத்தைக் கண்டுபிடிக்க, சாட்டிலைட் நேவிகேஷன் சிஸ்டம்ஸ் பயன்படுத்தப் பட்டது. குடைய வேண்டிய திசையை காட்ட லேசர் கதிர்கள் வழிகாட்டியாய் செயல்பட் டன. இயந்திரம் துளையிட்டு முன்னே றியபோது வெடிமருந்து வைப்பதற்காக போடப்படும் துளைகள் துல்லியமான இடங்களில் இருக்கும் வகையில் அதை இந்த லேசர் கதிர்கள் கட்டுப்படுத்தின.

ஒவ்வொரு வெடிப்புக்கும் சுமார் 100 துளை கள் போடவேண்டி யிருந்தன. ஒவ்வொன்றும் 5.2 மீட்டர் ஆழமான வை. இத்துளைக ளில் சுமார் 500



லேர்டால் நுழைவாயில்

கிலோகிராம் வெடிமருந்து திணிக்கபட்டது. இதனால் சுமார் 500 கன மீட்டர் பாறைத் துண்டுகள் வெடித்துச் சிதறின. இவ்வாறு சிதறிய துண்டுகள் டிரக்குகளில் அப்புறப்படுத்தப்பட்டன. மறுபடியும் துளையிடும் வேலையை துவங்குவதற்கு முன்பு, குகையின் சுவர்களையும் கூரையையும் வலுப்ப டுத்த வேண்டியிருந்தது. இதற்கென நீண்ட ஸ்டீல் போல்ட்டுகள் பயன் படுத்தப்பட்டன. கூரையின் மேற்பரப்பு கள் ஷாட்கிரீட் முறையில், அதாவது ஃபைபரால் வலுவூட்டப்பட்ட காங்க்ரீட் டால் ஸ்பிரே செய்யப்பட்டன. ஒவ் வொரு குழுவும் வாரத்திற்கு சுமார் 60,70 மீட்டர் தூரம் முன்னேறிச் சென்றது. செப்டம்பர் 1999-ல், மெயின் குகை பாதையை தடுத்த கடைசி பாறை தகர்க்கப்பட்டு, குழுக்கள் இரண்டும் ஒன்றையொன்று சந்தித்தன. குடைந்து சென்றதில் இரண்டு குழுக்களுக்கும் இடையில் இருந்த வித்தியாசம் சுமார் 50 சென்ரிமீட்டர் தான்.

பதினான்கு மாதங்களுக்குப் பின்னர் திட்டமிட்டபடியே குகை பாதைக்கு திறப்பு விழா நடத்தப் பட்டது. இந்தக் கட்டத்தில், இதற்கு ஆகியிருந்த செலவு 576 கோடி ரூபா யாகும்.

**காற்றோட்ட வசதி எப்படி?**

சுவாசிக்க சுத்தமான காற்று கிடைக்கும்படி செய்வதே குகை பாதை் எஞ்சினயர்களுக்கு எப்பொழு தும் இருந்துவரும் சவாலாகும். லேர்டால் குகை பாதையில் கிட்டதட்ட 20 நிமிடம் பயணிக்க வேண்டியிருப்பதால், சுவாசிப்பதற்குப் போதுமான சுத்தமுள்ள காற்ற மிகவும் முக்கியம். இதற்கு என்ன செய்தார்கள்.?

லேர்டால் நுழைவாயிலில் இருந்து 6.5 கிலோமீட்டர் தூரத்திலிருக்கும், 2 கிலோமீட்டர் நீளமுள்ள காற்றோட்ட குகைபாதை, பக்கத்திலிருக்கும் பள்ளத்தாக்கு வரை செல்கிறது. அது புகைப்போக்கியைப்போல், அதாவது, அசுத்தக் காற்றை வெளியேற்றும் வழியைப் போல் செயல்படுகிறது. சுத்தமான காற்று குகை பாதையின் இரண்டு நுழைவாயில்களிலிருந்தும் உள்ளிழுக்கப்பட்டு, மாசுபட்ட காற்று காற்றோட்ட குகை பாதையின் வழியாக வெளியேற்றப்படுகிறது. காற்று அதிகம் மாசடைகையில் அந்தக்காற்றை அதிகளவில் வெளியே ற்றுவதற்கு காற்றோட்டக் குகை பாதையில் பொருத்தப்பட்டுள்ள் சக்தி வாய்ந்த இரு காற்றாடிகளை- இவ்விரண்டின் ஒட்டுமொத்த அதிகபட்ச திறன் மணிக்கு 17 லட்சம் கனமீட்டர்- பயன்படுத்திக் கொள்ள லாம். இந்த அமைப்பினால் போதி யளவு சுத்தமான காற்று லேர்டால் நுழைவாயில் பக்கத்தில் கிடைக்கிறது. ஆனாலும் ஆர்லாண்ட் நுழைவாயில் பக்கம் இன்னும் ஏதாவது வசதி செய்யப்பட வேண்டியருந்தது, ஏனெனில் அது நீளமானது. ஆகவே காற்றோட்ட குகை பாதையை நோக்கி செல்லும் காற்றின் அளவை

# Institute of Information Technology
## (IIT)

## Computer Study and IT Solutions Center

**In Association with**

Hiway Informatics (India)

**Features...........**

*World Recognised certificate*
*All graduates Lecturers*
*Unlimited practical time*
*Flexible time table*
*Leading European, University syllabus*
*Easy instalment (Monthly)*

Key To IT World

**T.P : 021 4591920, Fax : 021 4591920**
**E_mail: I.I.T@wow.lk**

**K.K.S Road,**
**Mallakam,**
**Jaffna,**


# Smart Printers

## All Kind of Print Solution Centre

- **General and Commercial**
  **Off-set Printers & Screen Printers**
- **Computer Graphic Designers**
- **High Quality Production**

**Call as: @ 0777250850, 0777252022**

**717, K.K.S. ROAD, JAFFNA.**



கூரையில் 32 சிறிய, உந்தும் காற்றாடிகள் பொருத்தப்பட்டன. என்றாலும், ஆர்லாண்ட் பக்கத்திலிருந்து காற்றோட்ட குகை பாதையின் முகப்புக்கு அதிக தூரத்தைக் கடக்க வெண்டியிருப்தால் அதற்குள் இந்தக் காற்று இன்னும் மாசுபடுகிறது. இந்த சிக்கலை எவ்வாறு தீர்ப்பது?

100 மீட்டர் நீளத்தில் மெயின் குகைபாதைக்கு இணையான மற்றொரு குகைபாதையை ஆர்லாண்ட் நுழைவாயில் இருந்து 9.5 கிலோமீட்டர் தூத்தில் அமைத்து, அதில் காற்றை சுத்தப்படுத்தும் ஓர் எந்திரத்தை நிறுவுவதன் மூலம் தீர்வு கண்டனர். இதன் இரண்டு நுழைவாயில்களும் மெயின் குகை பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளன. மெயின் குகை பாதையிலுள்ள காற்று இந்த இணை குகை பாதைக்குள் திருப்பி விடப்படுகிறது. அங்கே அதிலுள்ள 90 சதவிகித தூசியும் நைட்ரஜன் டையாக்ஸைடும் வடிகட்டப்பட்டு அது சுத்திகரிக்கப்படுகிறது.

இந்த காற்றோட்ட அமைப்பினாலும் சுத்தப்படுத்தும் முறையாலும், லேர்டால் குகை பாதையில் அதிகபட்சமாக மணிக்கு 400 கார்கள் வரை திருப்திகரமாக பயணிக்கலாம். குகை பாதையில் வைக்கப்பட்டிருக்கும் சென்ஸார்கள் காற்றின் தரத்தை கண்காணித்து, காற்றோட்ட அமைப்பு செயல்படும் விதத்தை ஒழுங்குபடுத்துகின்றன. மாசுபடும் அளவு மிக அதிகமாகிவிட்டால் இந்தக் குகைப்பாதையில் போக்குவரத்து நிறுத்தப்படும். ஆனால் இதுவரை இவ்வாறு நிறுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

### எந்தளவு பாதுகாப்பானது?

குகை பாதையில் பயணிக்க சிலருக்கு பயம். இந்தப் பயத்துடன், ஐரோப்பிய குகை பாதைகள் பலவற்றில் சமீபத்தில் நடந்த சாலை

விபத்துக்களும், தீ விபத்துக்களும் சேர்ந்து, லேர்டால் குகை பாதையில் பாதுகாப்புக்கு அதிக கவனம் செலுத்த வைத்துள்ளன. இதற்காக குகையில் என்ன பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

லேர்டாலில் ஒரு கட்டுப்பாட்டு மையம் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாதகாப்பு அமைப்புக்களையும் தொடர்ந்து கண்காணிக்கிறது. பாதுகாப்பு அமைப்பில் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடும் பட்சத்தில், குகை பாதை மூடப்படும். குகை பாதையை விரைவில் மூடி, அதில் பயணிக்கும் ஆட்களை வேகவேகமாய் வெளியேற்றுவதற்கு பல முன்னெச்சரிக் கைக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன.. மேலும், ஒவ்வொரு 250 மீட்டர் தூரத்திலும் அவசர தொலைபேசி களும், ஒவ்வொரு 125மீட்டர் தூரத்திலும் இரண்டு தீயணைப்பு சிலண்டர்களும் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் எவ்விடத்திலிருந்தாவது தீயணைப்பு சிலண்டர் எடுக்கப்பட்டி ருந்தால், அந்த இடத்தை இந்த கட்டுப்பாட்டு மையம் தானாகவே குறித்துக் கொள்கிறது. அவ்வாறு ஒரு சிலண்டர் எடுக்கப்பட்டால், குகை பாதைக்குள் நுழைய வேண்டாமென ஓட்டுநர்களை எச்சரிக்கும் சிவப்பு விளக்குகள் எரியும். குகை பாதையின் உள்ளே பயணிக்கும் வாகனங்கள் ஆபத்துக்குத் தப்பி பாதுகாப்பான திசையில் வெளியேறும் படி சமிக்கைகளும் எச்சரிக்கை விளக்குகளும் ஓட்டுநர்களை அறிவுறுத்தும். ஓட்டுநர்கள் தங்கள் வாகனங்களை எளிதில் திருப்ப முடியும்.

ஏனெனில் கார்களைத் திருப்புவ தற்கு வசதியான அமைப்புக்கள் ஒவ்வொரு 500 மீட்டர் தூரத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதே போன்று பெரிய வாகனங்களைத் திருப்புவதற்கு வசதியான அமைப்புகள் 15 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரேடியோ ஆன்டெனா அமைப்பும் இந்த குகை பாதையில் உள்ளது. இதனால் ஓட்டுநர்கள் தங்கள் கார்களிலுள்ள ரேடியோவிலேயே எச்சரிக்கை அறிவிப்புக்களை கேட்க முடியும். குகை பாதைக்கு உள்ளேயும் வெளியேயும் செல்லும் வாகனங்கள அனைத்தையும் கண்காணிப்பதற்கு எண்ணிக்கை மற்றும் புகைப்பட அமைப்புகள் உள்ளன. இந்த குகை பாதையில் வாகனங்களின் எண்ணிக் கை குறைவாக இருப்பதுடன் ஒப்பிடு கையில், சாலை அதிகாரிகள் இதை மிகவும் பாதுகாப்பானதாக கருது கின்றனர்.

**இதில் என்ன வேறுபாடு?**

இந்த குகை பாதையில் வாகனத்தை ஓட்டிச் செல்வது எப்படி இருக்கும்? ஓட்டுநர்கள் பாதுகாப்பாக உணருவதற்கும் அதே சமயத்தில் பாதுகாப்பாக ஓட்டுவதற்கும் ஏற்றவாறு, இந்த குகை பாதையில் பயணிப்பதை ஓர் இன்ப அனுபவமாக்குவதே எஞ்சினி யர்களின் முக்கிய நோக்கமாய் இருந்தது. இதை பூர்த்தி செய்வதற்கு, ஓர் ஆய்வு மையத்திலுள்ள போக்கு

வரத்து உளவியல் நிபுணர்களும், தொழில்முறை லைட் டிசைனர்களும், ஒரு டிரைவிங் சிமுலேட்டரும் உட்பட இன்னும் பிறரின் உதவியால் குகை பாதையின் உட்புறம் வடிவமைக்கப் பட்டது.

இதன் பலன்? இந்த குகை பாதை நேர்பாதையாகவே நெடுகிலும் இல்லை. சில இடங்களில் சற்று வளைந்து செல்கிறது. இது ஓட்டுநர்கள் உறங்கிவிடாமல் இருக்கச் செய்கிறது. ஆனாலும் அவர்கள் 1,000 மீட்டர் தூரம் வரை முன்னால் காண முடியும். எதிரில் வரும் போக்குவரத தின் தூரத்தை கணக்கிடுவதையும் இந்த வளைவுகள் எளிதாக்குகின்றன. பெரிய குகைபோன்ற மூன்று மவுண்டன் ஹால்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவை பயணம் சலிப்புத் தட்டாமல் இருக்க உதவும். இதனால் அதிக தூரமுள்ள ஒரே குகை பாதையில் பயணிக்கும் உணர்வின்றி, தூரம் குறைந்த நான்கு குகை பாதைகளின் வழியாக பயணிப்பதைப போன்ற மாய தோற்றத்தை கொடுக்கும். இந்த ஹால்களில் விசேஷ லைட்டிங் வசதி செய்யப்பட்டுள்து. தரையில் மஞ்சள் அல்லது பச்சை விளக்குகள், மேலே ஊதா விளக்குகள். இவை பகல் வெளிச்சம் போலவும், சூரியன் உதிக்கும் போது வரும் வெளிச்சம் போலவும் மாய தோற்றத்தைக் கொடுக்கும். இந்த வண்ண விளக்கு களுடன், குகை பாதை நெடுகிலும் போதுமான விளக்குகள் பொருத்தப பட்டிருப்பதால், இவை அநேக ஓட்டுநர்களை சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும்உணரச் செய்கின்றன.

இப்போது, உலகிலேயே மிக நீளமான குகை பாதையின் வழியே செல்லும் வினோத அனுபவத்தை பயணிகள் அனுபவிக்க முடியும். நவீன எஞ்சினியரிங்கின் இந்த சாதனையால், நோர்வேயின் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே நம்பகமான இணைப்பு ஏற்பட்டுள்ளது. மனிதன் தன் திறமையையும் புத்திக்கூர்மையையும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துகையில் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதற்கு இது பலமான அத்தாட்சியாகும்.

---

## காயங்கள்

*சொல்லி ஆறிய சோகங்கள்*
*சொல்ல முடியாத*
*வேதனைகள்*
*எல்லாமே புதைக்கப்பட்ட*
*புதைகுழியினுள்,*
*புதையல் தேடி தேடியே*
*புண்ணாகி போகிறது*
*என் உள்ளம்.!*

*- ரூபிகா*

# செல்லும் இடமெல்லாம்

-குகப்ஸ்



5

(மூன்னிரவு

நேரம் 10.30

திவ்யாவின் வீடு.

சிறிய ஓட்டுக்கூரையுள் அடங்கிய அவளது அறை. நான்கு பலகைகளை ஒருவாறு இணைத்துச் செய்த ஒரு மேசை. ஏறியமர்ந்தால் நானும் ஆடுவேன் என்னுமாப்போல் ஒரு கதிரை. அதில் அமர்ந்திருந்தவள் முன்னே பாடப் புத்தகங்கள் விரிந்து கிடந்தன. பென்சிலும் பேனையும் தம்முள் பேசிக்கொள்வது போற தலைக்குத்தன கிடந்தன. ஒரு 50W பல்ப் ஒளிர்ந்து கொண்டிருந்தது என்று சொல்வதை விட ஒளித்துக்கொண்டிருந் தது என்பது பொருந்தும் போலிருந்தது. அவ்வளவு வெளிச்சம். அறையெங்கும் அழுது வடிய வைத்துக்கொண்டிருந் தது. இவையெதுவும் திவ்யாவில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்திய தாகத் தெரியவில்லை. வழமையாக இதே பல்லவி என்பதால் மரத்துவிட் டாளோ எனவெண்ணவைத்தது. ஆனால் வழமையிலும் இன்று என்ன மாற்றம். நீ ஏன் எம்மைச் சீண்ட வில்லை, புத்தகத்தின் ஒற்றைகள் அவளைக் கேட்கின்றன. நினைவுச் சுழலின் தாக்கம் அவள் முன்னே கனவுகளை விரியப்பண்ணியிருக்கின்றது என்பது அகலித்து விரிந்த அவள் அழகிய விழிகள் சொல்லும் சேதியாகிற்று. இதழ்களில் சிரிப்பும் தன்னைத்தானே இகழும் விதமான ஒளன வளைவும் மாறி மாறி வருகின்றன.

ஒரு நாள் பழக்கத்தில் பிரசாத்துடன் தான் நெருங்கியதை எண்ணும் போது “சே, என்ன இது , இந்த பாழாய்ப்போன மனம் இப்படிக் கிடந்து அலைகிறதே, இதற்கு முன் இப்படி நடந்ததில்லையே” என எண்ணும்போது உதடுகள் ஏளனத்தில் வளைந்தன. அவன் தன்பால் பழக விழைகிறான் என்பதை நடந்த சம்ப வங்களைத் தொகுத்து உறுதிப்ப டுத்திய போது மகிழ்ச்சிச்சிரிப்பும் இதழ்களில் படர்ந்தது. அதே கணம், தன்மேல் ஒருவன் கைவைத்த காலைச் சம்பவம் மனதில் ரணத்தையும் ஏற்படுத்திற்று.

பின்வரும் நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும் அவள் பெண்புத்தி, “வேண்டாம் திவ்யா, இது உனக்கு நல்லதல்ல. உன் குடும்பநிலைக்கும் ஏற்றதல்ல, நீ படிச்சுத்தான் உன்ர குடும்பத்தைக் கரையேத்த வேணும். எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிப் போதடாதையடி” என இடித்துச் சொல்லிற்று. அதை ஏற்றுக்கொண்டவள் போல் கனவில் ஆட்டுவது போல் தனக்குத்தானே

தலையை ஆட்டிக்கொண்டாள்.

"திவ்யா, என்னம்மா லைற்றைப் போட்டுக் கொண்டு நித்திரையா கொள்ளுறா? வந்து படுபிள்ளை காலமை படிக்கலாம்" என்ற தாயின் குரலில் திடுக்கிட்டவள், லைற்றை நூர்த்துவிட்டு பாயை எடுத்து விரித்து படுத்துக்கொண்டாள். கண்களையும் இறுக்கி மூடினாள். "எங்கே நான் உன்னைத் தூங்கவிடப்போகிறேன்?" என்பதுபோல் மூடிய கண்களுள் பிரசாத் வந்தான். இவள் மனதினுள் கெஞ்சினாள்,


"வேண்டாம், என்னை விட்டுவிடுங்கள், நான் உங்களுக்கு எந்த விதத்திலும் பொருந்தமாட்டேன் என் குடும்பத்தை நான்தான் காப்பாத்த வேணும் நான் படிக்க வேணும் ப்ளீஸ்" என்றாள்.

அவன் தன் பற்கள் பளீரிடச் சிரித்தான். பதில் சொல்லவில்லை. இவள் உள் மனமே,

"அடி பைத்தியமே, அவன் விட்டாலும் என்னால் விடமுடியாது எனக்கு அவன் வேணும். உனக்கு வேனாமெண்டால் போடி. பெரிய இவள் மாதிரி வந்திட்டா கதைக்க" என்றது.

"எனக்கும் வேணும்" என்றது வெளிமனம். "சரிதான் ஏதோ அவர் உன்னட்டை வந்து ஐ லவ்யூ திவ்யா" எண்டு சொன்னமாதிரியல்லோ கிடக்கு நீ போடுற கூத்து. அவர் கம்பஸ்ஸில படிக்கிறவர். அங்க டான்ஸ் படிக்க எத்தன வடிவான பிள்ளையளெல்லாம் வாறது. அதுகளைப் பார்க்காம போயும் போயும் பிறுதல் ஓட்டுவீட்டுக்கை கிடக்கிற உன்னையே விரும்புவார்?" என்று இடித்தது இன்னொருமனம். "சரி ஒண்டும் புலம்பாதை, நாளைக்கு உன்னைத் தேடி வந்தாப் பிறகு முடிவு கட்டலாம். இப்ப பேசாம நித்திரை கொள்ளுற வழியைப் பார்" என்று தீர்ப்பு வழங்கியது அவள் மனம். இப்படி ஏதேதோ குழப்பங்களில் உறங்கியும் போனாள்.

---



ஞாயிறு காலைப் பொழுது கலகலப்பாக விடிந்தது. பிரசாத் எழுந்து கொண்டான். இயந்திர வேகத்தில் காலைக் கடமைகள் முடிந்தன. தனது வழமையான பாணியில் டெனிமுக்குள் புகுந்து ரிசேட்டை இறுக்கியவன் பேர்ப்பியூம் 'ஸ்கிக்' கொண்டான்.

கண்ணாடியில் எம்பியும் திரும்பியும் பார்த்துக் கொண்டவன் தன் பல்சரை வேகவேகமாகத் தூசி தட்டிக் கொண்டான். முற்றத்திலிருந்த பைப்பில் அவசரமாக கையலம்பிக் கொண்டான், பல்சரை ஸ்ராட்டாக்கிப் பறந்தான். "சீயான் நான் வாறன்ரா" என்ற குரல் கேற்றைத்தாண்டும் போது கேட்டது. பல்சர் சீறிக்கொண்டு விரைந்தது. "திவ்யா எப்படியும் சிவனம்மன் கோயில் ஒழுங்கைக்கு 6.45 எல்லாம் வந்து விடுவாள்" என்று எண்ணியவன் மணியைப்பார்த்தான். 6.42 பரமேஸ் வராச்சந்தியால் திரும்பியவன், கியர்களை எடுத்து அசுரத்தனமாக ஆர் முடுக்கினான். சிவன் அம்மன் கோயிலைத் தாண்டியவன், ஒழுங்கையில் திரும்பினான். கண்கள் விரைந்து ஒழுங்கையைச் சல்லடை இட்டன., திவ்யா தென்படாது சோர்ந்த போதும் இன்னும் வந்திருக்க மாட்டாள் எனத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டவன் ஒழுங்கைமுடிவில் பல்சரைத் திருப்பி மீண்டும் ஒழுங்கையில் இறங்கினான். இவ்வாறு ஒழுங்கையை அளக்கத் தொடங்கினான். இது வழமையெனினும் என்றுமில்லாதவாறு மனம் நிலைகொள்ளாது தவித்துக் கொண்டிருந்தது. இதனிடையே செல் ரிங்கிற்று எடுத்தவன்

"சொல்லு சீயான்"

"................."

"ஓமடா அந்த ஒழுங்கையிலைதான் நிக்கிறன் 4 தரம் திருப்பித் திருப்பி அளந்தாச்சு இன்னும் காணம்"

"......................."

".நம்பிக்கை இருக்கடா, அவள் வழமையா வர்ற நேரம்தான்"

"...................."

"சரியடா, பிறகு எடுக்கிறன் bye" என முடித்தான். சிவனம்மன் சந்தியை 5ம் தடவை தொட்டபோது, காலைக் கதிரில் புதிதாய்ப் பூத்த தாமரை மலராய் பச்சைச் சுடிதாரில் திவ்யா தென்பட்டாள். இவன் முகத்தில் பரவசம் பூசிக் கொண்டான். இதயம் பந்தயக் குதிரையாகப் படபடக்கத் தொடங்கியது.

(செல்வோம்.)



## தனியே தன்னந் தனியே..

ஆதிக்க சக்திகளுக்கஞ்சி
அந்நியப்படுத்தப்பட்ட ஆப்கானைப் போல்
தனியே தவிக்கவிட்டாய் கண்ணே-
கட்டிய கணவன் தடுத்தானா உன்னை..?

-சஜீபன்

# பெண் விடுதலை

சந்திரகாந்தா

அடுப்பூதும் பெண்கள் ஆகாயத்தையும் தொட்டுவிட்டு வந்து விட்டார்கள். அரியணையில் ஏறி ஆட்சியும் புரிகிறார்கள். அரச அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் ஆண்களைப் பின் தள்ளிவிட்டு அட்டகாசமாக வலம் வருகிறார்கள். இதற்கு மேலும் என்ன வேண்டிக் கிடக்கிறது பெண்விடுதலை? என்று எனதருமைச்சகோதரர்கள் ஆதங்கப் படுவது என் காதில் கேட்கிறது. ஆனால் உண்மையிலேயே பெண் விடுதலை பெற்று விட்டாளா?

படித்தென்ன, பட்டங்கள் பெற்றென்ன, பதவிகள் வகித்தென்ன, பெண் இன்னமும் இந்தப்பாழ்பட்ட சமுதாயத்தில் இரண்டாந்தரப் பிரஜையாகவே கணிக்கப்படுகிறாள். நடாத்தப்படுகிறாள். மேலோங்கிய பெண்களை விட இன்னும் பெரும்பாலான பெண்கள் உரிமைகளின்றி அடிமைத் தீயினில் கனன்று கொண்டிருக் கின்றனர். மேலோங்கிய பெண்கள் மட்டும் என்னவாம்?

எவ்வளவு படித்தாலும், சீதனமின்றி பெண்ணை ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகவில்லையே. டாக்டருக்குப் படித்து பெரும் பணம் சம்பாதிக்கும் பெண்கள் கூட இன்று வரை சீதனம் கொடுக்க வேண்டிய நிலையில் மாற்றம் ஏற்படவில்லையே!. படித்துப்பதவி வகிக்கும் பெண்களின் நிலை குடும்பத்திற்குள்ளும் மேம்படவில்லை. ஆணுக்கு அடங்கியேநடக்க வேண்டிய நிலை. கல்லானாலும் கணவன்: புல்லானாலும் புருசன் என்று கணவனின் எல்லா நடத்தைகளையும் பொறுத்துப் போகவேண்டியவளாக பெண் இருக்கிறாள். இது மறுவளமாக இருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சும்.

சமூகத்திலும் பெண்ணைப் யாசகப் பொருளாகப் பார்க்கின்ற நிலைமை மாறவில்லை. படித்த, உயர்பதவி வகிக்கும் பெண்களையும் வெறும் உடல் கண்ணாட்டத்திலேயே பார்க் கிறார்கள். கோழிக்குஞ்சை இரையாக்கப் பார்க்கும் பருந்தின் பார்வையையே பெண்ணில் பதிக்கிறார்கள்.

பெண்களிடம் மேலோங்கி வருகின்ற சுயமரியாதைமிக்க ஆளுமைப்பண்புகள் கூடக்காலப் போக்கில் ஆணாதிக்கச் சமூகத்தால் மழுங்கடிக்கப்படுகிறது. ஒழுக்கம் கட்டாயமாகப் பேணப்படவேண்டும். எனினும், இது தொடர்பாக ஒரு தலைப்பட்சமாக பெண் விமர்சிக்கப் படுகிறாள். இந்த நிலையில் பெண் விடுதலை, உரிமை எல்லாம் மாயைகளே!

# வேற்று பாஷைகளால் சொக்கிப் போகும் கில்லர் திமிங்கலங்கள்.

"சிறு கூட்டங்களாக கூடிவாழும் கில்லர் திமிங்கலங்கள் ஒரே கூட்டத்தில் வாழ் நாள் முழுவதையும் கழித்தாலும் எவ்வாறு உட்கலப்பை தவிர்க்கின்றன?" என்ற கேள்விக்கு வான்கூவர் அக்வேரியத்தில் மூத்த அறிவியலாளரான லான்ஸ் பேரிட்-லென்னர்ட் ஏழு வருடங்கள் மரபியல் ஆராய்ச்சி செய்தார். பிரிட்டிஷ் கொலம்பியாவிலும் அலாஸ்காவிலும் உள்ள 340 கில்லர் திமிங்கலங்களின் DNA மாதிரிகளையும் வைத்து ஆய்வு செய்தார். அவற்றின் அடிப்படையில் பெண் திமிங்கலங்கள் மற்ற சிறு கூட்டங்களிலுள்ள ஆண் திமிங்கலங்களுடனேயே இனக்கலப்பில் ஈடுபடுவதாகவும் தங்கள் பெருங் கூட்டத்தை அல்லது சமுதாயத்தைச் சேராத பிறவற்றுடன் 'கலப்புத் திருமணம்' செய்வதில்லை எனவும் கண்டறிந்துள்ளார். "முறைகேடாக இணைசேருவதற்கும் அத்தாட்சி இல்லை" என பேரிட் லென்னர்ட் கூறுகிறார். "சொல்லப்போனால் இணைசேருவது அனைத்தும் வெகு வித்தியாசப்பட்ட பாஷைகளைப் பேசும் தொகுதியினருடனேயே நடைபெறுகிறது." "கில்லர் திமிங்கலங்கள் மிக மிக தூரத்து உறவினருடன் இணைசேர முயலுகின்றன. ஒரு வேளை மற்ற திமிங்கலங்களின் பேச்சுக்கள் அல்லது பாஷைகளைக் கவனித்த பிறகு தன் பாஷைகளிலிருந்து வெகுவாய் வித்தியாசப்பட்ட ஒன்றை கண்டுபிடித்து அதனுடன் இணைசேரலாம்" என்கிறார் இந்த அறிவியலாளர்.

---

## சீ ...தனம்

*ஆண்மகனே! - பெண்ணிடம் பிச்சைக்காரத்தனமாய் !......*
*குமரிகள் கூட்டம் - கேவலம் ஆண்மகனிடம் கோரிக்கை!*
*முதுகெலும்பில்லாத ஆண்மகனுக்கு எதற்கு திருமணபந்தம்?.*
*பெண் பார்க்க வந்தபின்,*
*பொன் கேட்ட மன்னனே!*
*உன் எண்ணமதை முன்னே அறிந்திருந்தால்:*
*Phone பண்ணியிருப்பேனே!........*
*எனது வீடு நகைக்கடை அல்ல என்று....*

*- பா.ரிஷாந்தினி.*

# மனமும் கணினியும் ஒன்று..!

C++கேள்விப்பட்டிருக்கிறோம். அது என்ன மனம்++? கணினியில் Operating System, Language, Harddisk, Network என்று படிக்கிறோம். இங்கே நமது மனதையும் அதுமாதிரியே படிக்க இருக்கிறோம். நமது மனதும் கணினி மாதிரிதான். அதுதான் இக்கட்டுரையின் உட்கருத்து (Kernel).

கணினியை ஓன் செய்தவுடன் Energy Star வரும். நமது வாழ்க்கையில் நல்ல கல்வி கற்று முன்னேறும் ஊக்கம் (Energy) இருந்தால் நாமும் புகழ்பெற்ற சாதனையாளராக (Star) வரலாம்.

Energy Star வந்த பிறகு நீங்கள் யார் (User Name) என கேட்கும். நாமும் நம் மனதிடம் நான் யார் என கேட்க வேண்டும். சரியான நுழைவுச் சொல் (Pass Word) கொடுத்தால்தான் கணினி வேலை செய்யும். சரியான நுழைவுச்சொல் கொடுக்கத் தவறினால் நமது Profile வராது. நாமும் நல்ல எண்ணங்களை மனதிற்கு கொடுக்க வேண்டும். தவறினால் நல்ல வாழ்வென்னும் Profile நமக்கமையாது.

கணினியில் Hard Diskகில்தான் தகவல்களை (Data) பதிகிறோம். இதற்கு முன் Format செய்கையில் /s/q என்று தருவோம். நாம் நம்மை சீர்படுத்தி விரைவான (Quick)[/] முன்னேற்றம் காணவும் வெற்றி (Success)[/s]அடையவும் நல்ல சிந்தனைகளை மட்டும் எப்பவுமே ஆழ்மனதிலும் (Primary Storage), வெளி மனதிலும் (Second Storage) வைத்துக் கொள்ள வேண்டும்.

கணினிக்கு சுயசிந்தனை (Artycial Intelligence) இல்லை. அதனால் என் வயது லதா, என் பெயர் 26 ஆண்டு என கொடுத்தால் வாங்கிக் கொள்ளும். நமது மனமும் நல்ல எண்ணங்கள் (Processed Data), தீய எண்ணங்கள் (Raw Data) என எதை அளித்தாலும் வாங்கிக் கொள்ளும்.

தீய எண்ணங்கள் Virus மாதிரி. அவை நம்மை நன்றாக வாழ விடாது. எனவே மனதை வைராக்கியமாக (Anti-Virus) வைத்து தீய எண்ணங்கள் எண்ணும் வைரசை நம்மிடம் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நமது மனதிடத்தை Update செய்யாவிடில் வைரஸ் எனும் தீய எண்ணங்கள நம் மனதில் தொற்றிக் கொள்ளும்.

அப்போது கணினி இயங்கமுடியாமை (Hang) என்ற நிலை வருவது போல் நமது மனமும் சிறப்பாக இயங்காமல் தவறான பாதையில் (Invalid Path) நம்மை செயல்படுத்தும். எனவே Hard Disk என்னும் மனதில் தீய எண்ணங்கள் என்கிற Bad Secter வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வேளை தவறி கணினி Hang ஆனால் அதனை உயிர்ப்பிப்பது Boot Disk. மனம் தோல்விகளாலும் (System Failure) தீய எண்ணங்களாலும் ஒடிந்து போனால் அங்கே உற்சாக ஊக்கமுள்ள உயர்ந்த சிந்தனைககளை உயிர்ப்பித்து (Boot செய்து),

இன்று புதியதாய் பிறந்தோம் என புதுமனிதனாக மலர வேண்டும்.

Interup இருந்தால்தான் கணினி சிறப்பாக இயங்கும். IVTல் (Interrupt Vector Table) Interupகள் பதிவு செய்வது மாதிரி ஆழ்மனதில் நற்செயல்களை பதித்தால் வாழ்வும் வசப்படும்.

வன்பொருளுக்கும் மென்பொருளுக்கும் ஒரு இடைமுகப்பாக (Interface) செயல்படுவது இயக்கமுறைமை (Operating System). இதிலே FCFS (First Comes First Serves) மற்றும் RR (Round Robin) போன்ற செயல்படும் விதங்கள் உண்டு.

நமது உடலுக்கும் உயிருக்கும் இடைமுகப்பாக செயல்படுவது மனமே. இதில் FCFS முறையில் முதலில் தோன்றும் நல்ல எண்ணங்களை செயல்படுத்தி விட வேண்டும்.

பிறகு RR முறைப்படி (Read to Review) நாம் செய்த செயல்களை ஒவ்வொன்றாக பரிசீலித்து தவறான செய்கைகளை விலக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இவ்வுலகின் உற்ற நண்பனாக (User Friendly) நாம் வாழலாம்.

அகத்தின் அழகு முகத்தில் என்பார்கள். ஆம், நம் மனதை அழகுபடுத்துவது அத்தியாவசியமானது. என்னதான் CPUவில் பணிகள் (Procerss) நடந்தாலும் அதன் வெளிப்பாடுகள் (Out put ) என்னவோ CRT Monitor இல்லாமல் இருக்க முடியாது. இதுதான் நம் மனதுக்கும் பொருந்தும். என்னதான் மனம் எண்ணினாலும் CRT (Continuous Reading Technique - CRT) என்பதன் மூலம் நல்ல புத்தகங்களை தொடர்ந்து படித்து வருவதை பழக்கமாக்கி கொண்டால் (Customize) கதிர் வீச்சுகள் (Radiation) அடையலாம்.

வாழ்வா? சாவா? என்னும் மனப்போராட்டம் ஏற்படுவது இயல்பு. அவ்வேளைகளில் (Access Time), Java என்ற மொழியை நினைக்க வேண்டும். ஜாவாவை பணித் தளம் சாரா (Platform Iindependent) மொழி என்பார்கள். நமது மனமும் யாரையும் சார்ந்திராமல் (Independent) சுயமாக செயல்பட்டால் வாழ்வென்னும் இனிமையான கோட் (Sweet Code) நமக்கு கிடைக்கும்.

Language மாதிரி மட்டும் நம்முடைய மனம் செயல்படுவதில்லை. Package மாதிரியும் செயல்படும். Word இல்லாத கணினி ஏது? சொல் இல்லாத வாழ்க்கையும் இல்லை. புதிய புதிய கோப்புகளை Open செய்வது மாதிரி புதிய புதிய கருத்துக்களை எண்ண வேண்டும். அதோடு நில்லாமல் நற்சிந்தனைகளை மனதில் பதியச் செய்ய (Save) வேண்டும். Save As என்பதைப் போல வேறு கோணங்களில் நம் மனம் சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு சிந்திக்கும் வேளையில் எண்ணங்களை வெளியடுவதற்கு (Print) முன்பாக அதன் விளைவுகளை (Print Prieview) சற்று சிந்தித்து பேச வேண்டும். பின்பு நல்ல செயல்களை Redo செய்ய வேண்டும். தவறான செயல் ஏதேனும் செய்தால் Undo செய்து விட வேண்டும்.

தகாத சொற்களை (Bad commamd) யாராவது சொன்னால் அதனை நம் மனதிற்கு அளிக்காமல் Cut செய்துவிட வேண்டும். நல்ல கருத்துக்களை யார்

# CCS

## College of Computer Studies

119, Pointpedro Road, Nallur,
Jaffna, Srilanka.
☎ 0777-279034

## Courses

Office Automation Course

Diploma in Computer Application

Diploma in Desktop Publishing

Computerized Accounting

Diploma in Multimedia

Diploma in Programming

Diploma in Web Designing

Diploma in Hardware Engineering

## COLLEGE OF COMPUTER STUDIES

- Why we are different......
- Unlimited Practical Hours
- Individual and Group Classes
- Easy payment scheme
- Printed study pack
- Qualifided lecturers Pannel

சொன்னாலும் அப்படியே Copy செய்து நம் மனதில் Paste செய்துவிட வேண்டும். சிறப்பான உயர்ந்த கருத்தாக்கங்களை

Paste Special செய்தால் சிறப்படையலாம். நல்ல புத்தகங்கிளில் உள்ள கருத்தமைவுகளை Bookmark செய்யவேண்டும். உலகில் சிறப்பானவற்றை கண்டு பிடித்து (Find) நம் மனதில் உள்ள தெளிவில்லாத கருத்துகளுக்கு Replace செய்ய வேண்டும். இதன் மூலம் தாழ்வான நிலையில் (Lower Case) யார் இருந்தாலும் உயர்வான நிலைக்கு (Upper Case) மாற்றப்படுவர்.

நல்லவர்களுடன் தொடர்பை (Link) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் நல்லவர்கள் நமக்கு பயன்மிகு தோழமை கொண்டவர்களாக (User Friendly) அமைவர்.

Seeing Is Beliving என்று பொதுவாக சொல்வார்கள். அதனையே கணினியில் WYSIWYG (What You See Is What You Get) என்கிறோம். நாம் எதை பார்க்கிறோமோ அதுவே நம் ஆழ்மனதில் பதிந்துவிடும். நமது ஆழ்மனம் RTC மாதிரி. கணினியை On செய்தால் அது அன்றைய திகதியை காட்டும். அடுத்த நாள் On செய்தால் அதுவும் அன்றைய திகதியை காட்டும். Off செய்துவிட்டு On செய்தாலும் திகதியை சரியாக காட்டுவதற்கு RTC (Real Time Clock) தான் காரணம். நாம் தூங்கினாலும் நம் ஆழ்மனம் தூங்காது. எனவேதான் அன்றைய அல்லது பழைய பதிவுகள் கனவுகளாக (Virtuality) வருகின்றன. ஆகவே நாம் பார்ப்பவையெல்லாம் (Views) நல்ல நோக்குடன் (Normal Views) இருக்க வேண்டும்.

சமுதாயம் என்பது தனி மனிதர்களின் கூட்டமே. ஒவ்வொரு தனி மனிதனும் சிறப்பாக இயங்கினால்தான் சமுதாயம் சிறக்கும். சமுதாயம் தான் நெட்வேக் (Nerwork).

ஒவ்வொரு கணினியும் சிறப்பாக இயங்கினால் நெட்வேக் ஒழுங்காக இருக்கும். தொடக்கத்தில் க்ளையன்ட்/சேர்வர் நெட்வேக் (Client/Server network) மாதிரி நமது மனமும் செயல்படும்.

எல்லா உணர்வுகளையும் (Clients), அறிவின் (Server) கீழ் ஒழுங்கபடுத்தி வாழப் பழகி கொள்ள வேண்டும். காலப்போக்கில் நமது மனம் Peer to peer Network ஆகிவிடும். அதாவது எதனையும் சமமாக எடுத்துக்கொள்ளும் ஏற்ற தாழ்வில்லா மனம் நமக்கு அமையும். இவ்வாறு அமைந்தால் சமுதாயம் (Network) சிறக்கும் என்பதில் ஐயம் இல்லை. (No Error)

நமது மனம் Explorer ஆக இருந்து உலகிலுள்ள அனைத்து அற்பவளங்களையும் (Resources) தெரிந்து வைத்திருக்க வேண்டும். எக்ஸ்ப்ளோரரில் ஹிஸ்டரி பட்டியலை போல் நமது வரலாற்றையும் (History) பண்பாட்டையும் (Geerations) நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இறுதியாக (EOF) ஆனால் உறுதியாக (Constant) இணையத் தளத்தில் எங்கு பயணித்தாலும் Home page வருவதைப் போல எந்நாட்டிற்கு சென்றாலும் நம் தாய்நாட்டையும் (Source Code) நமது தமிழ் மொழியையும் (மூலமொழி=Binary Language) நாம் மறவாமல் வாழ வேண்டும்.

# அன்றும் இன்றும்..3

-ஜேனா

“இதுவரை சொன்னவை எல்லாம்
அக்கரைப் பச்சைகள்!
கூர்ந்து பார்த்தால் இன்றிலும் தெரியம்
இக்கரைப் பச்சை!”

நிலாக்காட்டி சோறூட்டி நிழல்காட்டி பயமுட்டி
தினம்தினம் மாற்றமின்றி தினங்கள் கழிந்தது அன்று!
நிலாத்தாண்டி கலம் செலுத்தி நிஜவாழ்வின் நிறம்காட்டி
நிதம் நிதம் புதுவரவாய் நாட்கள் பிறக்கிறது இன்று!

மந்திரத்தில் கட்டுண்டு மாயங்களுக்கு பலியுண்டு
காணாத சக்திகளுக்கு உயிர்பலி கொடுத்தது அன்று!
மூடக் கொள்கைகள் தகர்த்து பகுத்தறிவு கொடுத்து
அறிவியலால் ஒளியியல் பரவுகிறது இன்று!

இனம் தெரியா நோய்களும் வலிப்பும் அம்மையும்
வாழ்க்கையை வாட்டி வதைத்தது அன்று!
ஒட்டிய மூளையை வெட்டிப் பிரிக்கும்
மரணத்தை வெல்லும் வளர்ச்சியில் மருத்துவம் இன்று!

கட்டிய வாழ்கை கசந்த போதும்
கொண்ட வாழ்வே ஆயுழ் வரைக்கும் அன்று!
மன வாழ்வில் பிறழ்வு கண்டால்
மறுமணம் கொண்டு மீட்சி பெறுவது இன்று!

(தொடரும்)

# நினையாதது நடந்தது! நிஜமாகவே காமராமுன் கண்ணீர்...

**கோயில் கட்டிய கூட்டம் இப்போ கொடும்பாவி எரிக்கிறது.**

குஷ்பு

கொஞ்சமும் எதிர்பார்த்திருக்க மாட்டார், தனக்கு தமிழக மக்களிடமிருந்து இப்படியொரு எதிர்ப்பு எழும் என்று.

அவருக்காக ஒரு காலத்தில் கோயில் கட்டியவர்கள் இப்படி கொடும்பாவி எரிக்கும் அளவுக்கு போவார்கள் என்று யார்தான் எதிர்பார்த்திருப்பார்கள்!

'எய்ட்ஸ் விழிப்பு உணர்வு' பற்றி குஷ்பு அண்மையில் இந்தியா டுடே பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "பெண்கள் திருமணமாகும்போது கன்னித்தன்மை கலையாமல் இருக்க வேண்டும் என்பது போன்ற எண்ணங்களிலிருந்து நமது சமூகம் விடுதலையாக வேண்டும்.

கல்வி பெற்ற எந்த ஆண்மகனும், தான் திருமணம் செய்யப்போகிறவள் கன்னித்தன்மையோடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான்.

ஆனால், திருமணத்துக்கு முன்பு செக்ஸ் வைத்துக் கொள்ளும்போது கர்ப்பமாகாமலும், பால்வினை நோய்கள் வராமலும் ஒரு பெண் தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தங்கள் செக்ஸ் விருப்பங்களைப் பற்றிப் பேசினால் அவர்களைத் தவறானவர்களாகப் பார்க்கும் ஆண்களின் கண்ணோட்டம் மாற வேண்டும்.." என்று தடாலடியாக தன் கருத்துகளைக் கூற, பிரச்சனை வெடித்துவிட்டது.

குஷ்பு விவகாரத்தில் முதலில் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்கள், விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் தான்.

இதைத் தொடர்ந்து பா.ம.க.வினரும் களத்தில் குதிக்க, விவகாரம் விஸ்வரூபமெடுத்தது. குறிப்பிட்ட சில மீடியாக்களும் குஷ்பு விவகாரத்தை ஊதிப் பெரிதுபடுத்த, சினிமாவில் இருப்பவர்களே இந்த விவகாரத்தின் அடுத்த கட்டம் என்ன என்பது போல் சுவாரஸ்யம் காட்ட ஆரம்பித்தார்கள்.

காரணம், அண்மையில் நடந்து முடிந்த தங்கர் பச்சான் விவகாரம்தான்.

பணத்துக்காக நடிக்கும் நடிகைகள் விபசாரிகளுக்கு ஒப்பானவர்கள் என்ற பொருள்பட தங்கர் பச்சான் பேசியதால் எழுந்த விவகாரத்தில் குஷ்பு காட்டிய ஆவேசம், திரைப்பட இயக்குநர்கள் சிலரைக் காயப்படுத்தி இருந்தது.

இந்நிலையில், தங்கர் பச்சானின் படம் பற்றி டி.வி. ஒன்றில் குஷ்பு சில

கருத்துக்களை பேசி வைக்க, அது தயாரிப்பாளர்கள் சங்கத்தினரைக் கொதிக்க வைத்தது. குஷ்பு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கொதித்தனர். அந்த விவகாரம் நீறுபூத்த நெருப்பாக இருந்த நிலையில்தான், இப்போது வேறு வகையில் சிக்கிவிட்டார் குஷ்பு.



"இங்கு நடந்த அனைத்தையும் நான் வெளிநாட்டில் இருந்தபடி கவனித்துக் கொண்டு தான் இருந்தேன். யாருக்கும் பயந்து நான் சிங்கப்பூருக்கு ஓடவில்லை. என் பயணம் மூன்று மாதங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. ஆனால், பயந்து ஓடி விட்டதாக செய்தி பரப்பிவிட்டனர். அடுத்து நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆராயவும் அதைச் செய்து முடிக்கவும் இதோ தமிழகம் வந்து விட்டேன். இதற்கு மேல் நான் இப்போது எதுவும் சொல்ல முடியாது" என்று தனது செல்போனை கட் செய்தார் குஷ்பு. அடுத்த சில மணி நேரங்களில்தான் அவரது மன்னிப்புப் படலம் ஜெயா டி.வியில் மட்டும் பிரத்யேகமாக அரங்கேறியது.

முதல்வருக்கு மிக நெருக்கமான வட்டாரங்களே குஷ்பு பேச வேண்டியவற்றை தயார் செய்து கொடுத்ததாம். அதை ஒன்றுக்கு பத்து முறை படித்துப் பார்த்த பின்பு, ஜெயா டி.வி. கேமிரா முன்பு கதறியழுது மன்னிப்புக் கேட்டார் குஷ்பு. 'நான் சொன்ன கருத்துக்கள் யாரையாவது புண்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்த வரைக்கும் பெண்களை நான் கேவலபடுத்தி பேசி இருந்தால் அது என் தாயைக் கேவலப்படுத்தி பேசுவதற்கு ஒப்பாகும்' என்று கண்ணீர் மல்க குஷ்பு பேசினார்.

ஆனால், குஷ்பு மன்னிப்பு கேட்டுவிட்டாலும் அவருக்கு எதிராக திரண்ட அரசியல் கட்சியினர் சும்மா விடுவதாக இல்லை.

அவர் எங்கே வந்தாலும் கறுப்புக் கொடி... கண்டனம் என்று தொடர்ந்து குஷ்பு எதிர்ப்பை மேற்கொள்ளப் போகிறார்களாம்.

அவர்களின் ஒரே இலக்கு.... குஷ்பு தமிழகத்தை விட்டே ஓடவேண்டும் என்பதுதானாம்!

# பொங்குதம்

## பலம் சேர்(ப்ப




தமிழ் இனம் தனது தாயகப் பிரதேசத்தில் தனக்கே உரிய மொழி, கலாச்சாரத்துடன் தமிழீழத் தனியரசை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் இதற்கு ஈழத்தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் காரணங்கள்

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் நாகரீகமாக வாழ்ந்து வருகின்றது.

2. தமிழ் இனத்தின் சுயாதீன செயற்பாடுகளை பெரும்பான்மை சிங்கள இனம் அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கட்டுப்படுத்துகின்றது. இதனை சனநாயகம் என்று கூறமுடியாது. இதனை எதிர்கொள்ள சுயாதீன அரசு அமைதல் அவசியம்.

3. கூட்டான சித்திரவதைகள், படுகொலைகள், நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு எனத் திட்டமிட்ட இனப்படுகொலைகள் இலங்கை ஜனநாயகச் சாசனத்தில் நடைபெறுகின்றது. இதனை உடைப்பதற்கு புதிய அரசியல் கட்டமைப்பு அவசியம்.

4. சிங்கள மேலாதிக்க எண்ணமும், தமிழரை இரண்டாம் தரபிரஜைகளாக நோக்கும் எண்ணமும் சிங்கள மக்களிடம் உள்ளது. இதனை அவர்களிடம் இருந்து அகற்றமுடியாது. இதனை ஆழிப்பேரலை அனர்த்த புனர்வாழ்விலேயே காணலாம். இதற்கு ஒரே ஒரு மருந்து பிரிந்து வாழுதலே. அன்று தமிழரசுக்கட்சியினர் சுட்டமண்ணும், பச்சைமண்ணும் ஒட்டாது என்றனர். இன்று நாம் இனமேலாதிக்க மனநோய் உள்ள சமூகத்துடன் ஒன்றாக வாழமுடியாது என்கிறோம்.

5. சமாதான சூழலில் பிரிந்து வாழ்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புத் தேவை. அன்றேல் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேசத்தின் பார்வைக்கு தெரியாமல் அழிக்கப்பட்டது போல் தொடர்ந்தும் எமது இனம் அழிக்கப்படும். ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் உடல், உள, ஊனமாக்கியும் பல மனித உரிமை மீறல்களைச் செய்த இலங்கை இராணுவத்தினை, ஐ.நா சமாதானப் படைக்கு அணிகலனாக்கியமை எமது மக்களின் கவலைக்கும், கண்டனத்திற்கும் உரியது.

மேலும் சர்வதேசம் சுதந்திர தேசமாக அங்கீகரித்தலேயே சிங்கள தேசம் சம அந்தஸ்தினை தமிழருக்கு வழங்க

நிர்ப்பந்திக்கலாம். அன்றேல். அடக்குமறைக்குள் தொடர்ச்சியாக வாழ வேண்டி ஏற்படும்.

6. இலங்கை இன்று இந்தியா. பாகிஸ்தான். சீனா. அமெரிக்கா. இஸ்ரேல். ஈரான் என ஆறுக்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து இராணுவ உதவிகளைப் பெற்று பல்வேறு வண்ணங்களால் சித்திரம் வரைவது போல தமிழின அழிப்போவியத்தை வரைகிறது. தொடர்ந்தும் இச்சமூக வன்முறைகளையும். மனிதநேயமற்ற செயற்பாடுகளையும் தமிழ் மக்கள் பொறுத்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். இதன் பிரதிபலன்களை சம்பந்தப்பட்டவர்கள் அனுபவிக்க வேண்டிவரும்.

7. நாகரீகமடைந்த உலகில். தகவல் தொழில்நுட்பம் மிகுந்த உலகில் இலங்கையில் தமிழர் அரச இயந்திரத்தினால் அடக்கப்பட்டு உள்ளனர்.

எமது உரிமைக்குரலை அரசு பயங்கரவாதம் எனப்பிரச்சாரம் செய்கின்றது. இதனை மக்கள் குரலாகவே எழுப்புகின்றோம்.

8. தமிழினம் இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தத்தினாலும் இன அழிப்பு நடவடிக்கைகளாலும் திட்டமிட்ட இன




முன்னேறமுடியாது உள்ளது. இதனை அகற்ற சுயமான ஆளகை ஆவசியம்.

9. இன்று மனிதநேய பணிகளை சர்வதேச நிறுவனங்களே வடக்கு கிழக்கில் செய்கின்றன. ஆனால் சர்வதேச நிறுவனங்களுக்கே தெரியும் தமது செலவில் 5% மட்டுமே பாதிக்கப்பட்டவர்களை சென்றடையும். ஏனையவை சர்வதேச நிறுவன உத்தியோகத்தினர்களின் போக்குவரத்திற்கும். இதரசெலவுகளுக்கும். எனவே. தமிழ் மக்களுக்கு முழுமையான மனிதநேயப்பணியினை சுயமான அரசாலேயே ஆற்றமுடியும். மேலும். சர்வதேச ஊடுருவல்களையும் தடுக்க முடியும்.

10. தமிழீழம் சர்வதேசத்தை அங்கீகரித்துவிட்டது. சர்வதேசம் தமிழீழத்தை அங்கீரிக்க எவ்வளவு காலம் காத்திருப்பது? அதனை தீர்மானிப்பது யார்? பொங்குதமிழே. தமிழினமே நீ பதில்கூறு.

நன்றி - வெப் தமிழன்

**பொங்கு தமிழுக்கு இன்னல் நேர்ந்திடேல் சங்காரம் நிஜமென்று ..........**

# குத்துச் சண்டை




## *ஜாக் ஸ்லாக் (JACK SLACK)*

புரௌவட்டன் ஜாக் ஸ்லாக்கிடம் தோற்றுப்போனதால் அவர் வகித்து வந்த சாம்பியன்பட்டம் ஜாக் ஸ்லாக் கைக்கு மாறியது. 1750 இல் அவர் புரௌவட்டனைத் தோற்கடித்து சாம்பியனாகப் பட்டம் பெற்றதையடுத்துப் பல வீரர்களோடு வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்தார். அவர் திடகாத்திரமான உடலும் துணிவும் கொண்டிருந்ததால் 10 ஆண்டு காலம் தன்னிகரற்ற சாம்பியனாகக் கொடி கட்டி பறந்தார். அவருடைய வெற்றிக்கு மற்றொரு காரணமும் இருந்தது.

அவர் காலத்தில், பலமும் துணிச்சலும் கொண்ட குத்துச்சண்டை வீரர்கள் தோன்ற வில்லை. இவரை மிஞ்சி விடக்கூடிய எவரும் இல்லாததால் இவரால் 10 ஆண்டு காலம் தோல்வியைச் சந்திக்காமல் காலந்தள்ள முடிந்தது. 1760 இல் ஒருவர் தோன்றினார். நெய்லர் என வழங்கிய பில்லி ஸ்டீவன்ஸ், ஜாக் ஸ்லாக்கைத் தோற்கடித்து சாம்பியன் பட்டம் பெற்றார். அந்தக் கால கட்டத்தில் சிலர் சாம்பியன் எனக் கூறிக் கொண்டு முளைவிட்டனர். அவர்களில் ஜாக் டெய்லர் என்பவரும் ஒருவர். அவர் 1761-ல் ரொம்.:. ஜாக்கனருடன் போட்டியிட்டதில் தோற்றுப் போனார்.

1762 இல் ஜோர்ஜ் மில்ஸன் என்பவர் ஜோர்ஜ் மெக்ஸ் என்பவருடன் போட்டியிட்டுத் தோற்கடித்து சாம்பியன் ஆனார். அவர் 1763 இல் ரொம் ஜூக்காவ் என்பவருடன் சண்டையிட்டுத் தோற்றுப்போகவே ஜூக்காவ் சாம்பியன் பட்டத்திற்குரியவர் ஆனார். 1766-இல் பில் டார்ட்ஸ் என்பவர் போட்டியிட்டு தோற்கடித்துச் சாம்பியன் ஆனார். 1769-இல் டார்ட்ஸ், டாம் லியான்ஸ் என்பவருடன் போட்டியிட்டதால் தோற்றுப்போய் சாம்பியன் பட்டத்தை இழந்தார்.

**~ வீமன்**

1770-இல் லியான்ஸ் ஓய்வு பெறவும், பீட்டர் கார்க்கோரன் என்ற ஐரீஷ் வீரர் சாம்பியன் எனக் கூறிக்கொண்டு புறப்பட்டார். அவரைப் போட்டிக்கு அழைத்தார் வில் டார்ட்ஸ். 1770-இல் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் பில் டார்ட்ஸ், கார்க் கோரனைத் தோற்கடித்துச் சாம்பியனாக வலம் வந்தார்.

1771-இல் மீண்டும் கார்க்கோரனுக்கும் டார்ட்ஸுக்கும் போட்டி நடந்தது. அதில் கார்க்கோரன் வெற்றி பெறவே டார்ப்ஸிடமிருந்த சாம்பியன் பட்டம் கார்க்கோரன் கைக்கு மாறியது.

அந்தப் போட்டியில் கார்க்கோரன் டார்ட்ஸை ஒரே நொக் அவுட்டில் வீழ்த்தி வெற்றிபெற்றார். அது முதல் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டார் கார்க்கோரன். அந்த ஆறு



ஆண்டு காலகட்டத்தில் அவர் 20 பேருடன் போட்டியிட்டு வெற்றிகளைக் குவித்து வந்தார். அந்த 20 பேரையும் அவர் ஒரே குத்தில் நொக் அவுட் செய்து வீழ்த்தி வெற்றிவாகை சூடினார்.

ஆனால் 1776 இல் முளைத்த ஹாரி செல்லர்ஸ் என்ற 24 வயது பிரிட்டிஷ் வீரருடன் மோதவேண்டியவரானார் கார்க்கோரன். அவர் வழக்கமாக பிரயோகிக்கும் நொக் அவுட் இவரிடம் பலிக்கவில்லை. மூன்று ரவுண்டுகள் இருவருக்கும் கடுமையான போட்டி இருந்தது. ஆஜானபாகுவான ஹாரிசெல்லர்ஸ் கார்க்கோரனைத் துரத்தித்துரத்தி அடித்தார். அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பின் ஹாரி செல்லர்ஸ், கார்க்கோரனை நொக் அவுட் செய்து தரையில் சாய்த்து விட்டார். ஆகவே ஆறு ஆண்டுகளாக அவருடன் ஒட்டிக் கொண்டிருந்த சாம்பியன் பட்டம், ஹாரி செல்லர்ஸ் கைக்கு மாறியது.

செல்லர்ஸ் ஐந்து ஆண்டுகாலம்

**நம்மப்பத்தி எப்ப எழுதப் போறாங்க..?**

சாம்பியனாக உலா வந்தார். 1780 இல் துக்கான் ஃ. பியர்ன்ஸ், செல்லர்ஸைப் போட்டிக்கு அழைத்தார். அவர்களிருவருக்கும் நடந்த போட்டியில் துக்கான்ஸிடம் செல்லர்ஸ் தோற்றுப் போய் சாம்பியன் பட்டத்தைத் துறந்தார். ஆனால் சாம்பியன் பட்டத்தைத் கைப்பற்றிய துக்கான்ஸ் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெற்றார். அந்தக் காலத்தில் 1782 இல் ஜாக் ஜார்விஸ் என்பவர் முளைத்துச் சாம்பியன் பட்டத் திற்கானப் போட்டிக்கு அறைகூவல் விடுத்தார். அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டவர் டாம் ஜாக்லிஸ் என வழங்கிய ரொம் ஜோன்ஸன் ஆவார்.

*அடுத்த இதழில் இவரைப் பற்றி....*

# இளையவர் பக்கம்

*அன்புள்ள இளையவர்களே!*

முதலிலேயே உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். சென்ற இதழில் பக்கப்பற்றாக்குறை காரணமாக உங்களுக்கான பக்கங்களை நமது முரட்டு ஆசிரியர் இடைநிறுத்திவிட்டார். கடுமையான போராட்டத்திற்கு பின் உங்களுக்காக மீண்டும் இவ்விதழில் இடம்பிடித்து விட்டேன்.

அத்தோடு, போனால் போகட்டுமென்று புதிர்போட்டி-03 இனை மட்டும் சென்ற இதழில் ஆசிரியர் பிரசுரித்து விட்டார். ஆனால் அதற்குரிய புதிர் சதுரத்தை மறந்துவிட்டார்.

சென்ற இதழில் புதிர் பூரணமாக இல்லாவிட்டால் கூட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பயிலும் ஏ. கபீர்த்தன் (620, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) எனும் மாணவனும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் பயிலும் தீபா பத்மநாதன் (அச்செழு, புத்தூர் வீதி, நீர்வேலி) எனும் மாணவியும் தாமே சதுரக்கூட்டைவரைந்து விடையை சரியாக எழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

தயாரிப்பு
-ருபி

## புதிர் போட்டி- 03 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | a | 2 | 6 | 1 | b | 3 | 7 | 4 |
| c | 8 | 4 | d | 5 | 2 | 7 | e | 3 |
| 8 | 1 | 5 | 2 | 6 | f | 9 | 4 | g |
| 1 | h | i | 8 | j | 4 | k | 3 | 9 |
| 4 | 3 | 1 | l | 8 | 7 | 2 | 9 | m |
| n | 6 | o | 7 | p | 1 | q | r | 5 |
| 7 | s | 8 | 3 | 4 | t | 5 | 6 | u |
| 9 | v | 6 | w | 3 | 5 | 1 | x | 8 |
| 3 | 4 | 9 | 1 | y | 6 | z | 5 | 2 |

a=9, b=8, c=6, d=9, e=1, f=3, g=7, h=5, i=7, j=2, k=6, l=5, m=6, n=2, o=3, p=9, q=4, r=8, s=2, t=9, u=1, v=7, w=4,

எட்டு 8 களை மட்டும் பயன்படுத்தி கூட்டியோ, கழித்தோ, பெருக்கியோ, வகுத்தோ 1000 எனும் எண்ணை பெறவேண்டுமென சென்ற இதழில் இடம் பெற்ற புதிரை பலர் கண்டுபிடித்திருப்பீர்கள். இருப்பினும் முடியாதவர்களுக்காக அதன் விடையை இங்கு தருகின்றோம்.

888+88+8+8+8=1000

இங்கு கூட்டல் செய்கை மட்டுமே பயன்படுத்தப்பட்டள்ளது.

# புதிர் போட்டிக்கான தீர்வு

கடந்த இதழ்களில் சதுரக்கூடுகளில் எண்களை நிரப்பி அதை எப்புறமாக கூட்டினாலும் சமமான தொகையே பெறப்படல் வேண்டும் என்ற வகையிலான இரு புதிர்களை தந்திருந்தோம். இவ்வாறான புதிர்களை அமைப்பது, தீர்ப்பது எப்படியென இப்போது பார்ப்போம்.

## *தீர்க்கும் முறை*

கடந்த இரு இதழ்களிலும் இடம்பெற்ற புதிர்களை எவ்வாறு நீங்கள் தீர்க்க முயன்றீர்கள்? எழுந்தமானதாக தீர்க்க முற்படின் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும். மேலும் ஒவ்வொரு புதிருக்கும் பல மணிநேரம் விரயமாக்கியிருப்பீர்கள். ஆயினும் இவ்வாறான புதிர்களை உருவாக்கவும் தீர்க்கவும் ஒரு இலகுவான வழியுள்ளது. இரு உதாரணங்கள் மூலம் அவற்றை உங்களுக்கு தெளிவாக்குகிறேன்.


### *உதாரணம் - 01*

புதிர் போட்டி 1 இல் 5x5 கட்டங்களை கொண்ட சதுரம் தரப்பட்டிருந்தது. பயன்படுத்தப் படவேண்டிய இலக்கங்கள் 1-25 வரையானதாகும்.

படி1: முதலில் தரப்பட்ட எண்களை 5x5 வரிசையில் எழுத வேண்டும்.


| | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **6** | **7** | **8** | **9** | **10** |
| **11** | **12** | **13** | **14** | **15** |
| **16** | **17** | **18** | **19** | **20** |
| **21** | **22** | **23** | **24** | **25** |

படி2: அடுத்து அவ் எண்களை பின்வருமாறு கோடுகள் மூலம் பிரிக்கவேண்டும்.




இதில் நடு எண்ணை மையமாக சமச்சீராக கொண்டு 5x5 கொண்ட சதுரம் வரகூடியதாக படத்திலுள்ளவாறு சதுரத்தை தடித்த கோட்டால் இனங்காண்க.

படி3: இனி அமைக்கப்பட்ட சதுரத்துக்கு வெளியிலுள்ள எண்களை சதுரத்தினுள் காணப்படும் வெற்றுக் கூடுகளுள் இட்டு சதுரத்தை நிரப்ப வேண்டும். இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் வெளியிலுள்ள இலக்கத்தை அதன் எதிர் புறமாகவுள்ள வெற்று கூட்டினுள்ளேயே இடல் வேண்டும்.




| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 16 | 9 | 22 | 15 |
| 20 | 8 | 21 | 14 | 2 |
| 7 | 25 | 13 | 1 | 19 |
| 24 | 12 | 5 | 18 | 6 |
| 11 | 4 | 17 | 10 | 23 |

படி:4 இனி அமைக்கப்பட்ட சதுரத்தை ஒழுங்காக நிமிர்த்தி வரைந்து அதனுள் உள்ள இலக்கங்களை அப்படியே இட்டு கூட்டிப்பாருங்கள். எப்புறமாக கூட்டிப்பார்த்தாலும் பெறப்படும் தொகை(65) சமமானதாகவே இருக்கும்.

**உதாரணம் 2:** புதிர்போட்டி 2 இல் 3x3 கட்டங்கள் கொண்ட கூட்டினுள் 1-20ற் கிடையிலான ஒற்றையெண்ணை பயன்படுத்துமாறு சொல்லப்பட்டிருந்தது. இதைத் தீர்ப்பது பற்றிப் பார்ப்போம்.


படி1:

| | | |
|---|---|---|
| 1 | 3 | 5 |
| 7 | 9 | 11 |
| 13 | 15 | 17 |

படி2:




படி3:





படி4:

| | | |
|---|---|---|
| 3 | 13 | 11 |
| 17 | 9 | 1 |
| 7 | 5 | 15 |

இவ்வாறு நீங்களும் பல புதிர்களை உருவாக்கலாம். இங்கு கவனிக்கப்படவேண்டியது, அமைக்கப்படும் கூடுகள் சதுரமாக இருக்க வேண்டும். (நிரைகளின் எண்ணிக்கையும், நிரல்களின் எண்ணிக்கையும் சமமாக இருக்க வேண்டும்.) பயன்படுத்தும் எண்கள் சீரான ஒரு ஒழுங்கில் அமைந்திருக்க வேண்டும். (கூட்டல்விருத்தி தொடர் ஒன்றை மேற்படி படிமுறைகளிற்கு உட்படுத்தி, சமமான நிரை, நிரல்கள் கொண்ட சதுரக் கூட்டை நிரப்புவதன் மூலம் பெறப்படும் சதுரமானது எப்புறமாக கூட்டிப்பார்க்கும் போதும் சமமான தொகையையே விடையாகத்தரும்.) இனியென்ன, புதிது புதிதாக நீங்களும் புதிர்களை உருவாக்கி ஆராயுங்கள்

# காதல்



அவன்-
களிந்த வயதுகளின்
எண்ணிக்கையை தாண்டாதமீசை !
அவள்-
கடைத் தெரு பொம்மைக்காய்
கண்ணீர் சிந்தும் பேதை !

அவன்...
அவள்.....
அவர்களானார்கள்-
எவர்களதும் கருத்தும் கருதாமல்.. !

காத்திருந்த வேளை
காலதேவன் கழுதையில்..
காதல் வந்த வேளை
அதுவே கடுகதியில் !

சூழமும் சுற்றமும்
பிரச்சினையில்லை...
காரணம்,
ஓமோனின் ஆட்சியில் இவர்கள்

காலங்கள் கரைந்தன.....
தெய்வீகம் தெய்வமானது
தெய்வம் தெருவுக்கு வந்தது...

காமத்தின் கண்கள் களைப்படைய
கட்டாயலீவிலிருந்த
மூளையின் கலங்கள்
வேலைக்கு திரும்பின.....!

இளமையெனும் இமயம்
எதிர்கால மரியானாவுக்குள்
அமிழ்ந்து போனது!
வளமான வாழ்வுக்காய்
வாய்த்த காதல் வளமற்று
தோன்றியது!

விடுபட விடைதேடியது மனம்...
விடையின்றிகடந்தோடியது
காலம்...

காலங்கள் நீள
கண்டவர் சொன்னதும்
கருத்திலேறியது !
காதலில் கணமும்
களங்கமுறக் கூடியது!!

எறும்பாய் தீண்டியது
பிரச்சினைகள்
எருமையாய் வந்து முட்டியது !
மலர் வனமாயிருந்த காதல்
மயானத்தில் திசை தேடி
தவித்தது!!

யார் பேச்சும் கேட்காது
யாத்த காதல் நூல்,
ஊர் பேச்சு கேட்டு
ஊடலாகி ஊசலாடியது !

தெளிவுறுமா....?
நிலைபெறுமா....?
சுயதேடல் விடைகூறும்...!!!

-தீபன்

# மந்திரமா...? தந்திரமா...? 5

நீலன்

இது வரை நாம் செய்த சின்னச் சின்ன மந்திரவித்தைகளை நம்பி நம்மையும் சிறுசாமியாராக சிலர் ஏற்றுக் கொண்டிருப்பர். இனிநாமும் அதற்கேற்றவாறுபோல் நடந்து கொள்ள வேண்டாமா?

முதலில் ஒரு சாமியாருக்கு இருக்கவேண்டிய முதல் தகுதி வருகின்ற பக்தர்களின் மனதை படிக்கும் திறமையாகும் (mind reading). ஏறக்குறைய இது உளவியல் மருத்துவத்திற்கு ஒப்பானது. அடுத்து இருக்க வேண்டியது அவர்களின் எதிர்காலம் பற்றி சொல்வதும் அதை அவர்கள் நம்பக்கூடியவாறு, அதாவது தந்திர மார்க்கமாக சொல்வதுமாகும். இம்முறை அப்படி எதிர்காலம் பற்றி சொல்வதற்கான ஒரு தந்திரமுறையை பற்றி பார்ப்போம். சொல்லப்படும் விடயம் எமது கற்பனையில் இருந்துதான் எடுக்க வேண்டும். ஆனால் சொல்லும் விதத்தை தான் ஒரு வித்தை மூலம் செய்ய வேண்டும்.

## *மந்திரத் தாளில் மாய எழுத்துக்கள்.*

தேவைப்படும் பொருட்கள் தேசிக்காயும், வெள்ளை தாட்களும், ஒரு சுடர்விளக்கும் மட்டுமே.

அடுத்து செய்ய வேண்டியது, தேசிக்காயை வெட்டி சாற்றை எடுக்க வேண்டும். அந்த சாற்றை மையாக பயன்படுத்தி வெள்ளை தாட்களில் உங்கள் கற்பனைக்கு எட்டிய எதிர்காலம் பற்றிய பொதுவான குறிப்புகளை எழுத வேண்டும். இப்போது வெள்ளை தாட்களில் எதுவும் எழுதியிருப்பது போல் தெரியாது.

இனி, குறிகேட்டு வந்திருக்கும் அந்த பக்தரிடம் உங்கள் எதிர்காலம் இதில் தெரியும் எனக் கூறி பொருத்தமான குறிப்பு எழுதப்பட்டுள்ள வெள்ளை தாளை எடுத்து காட்ட வேண்டும். அத்தாளினை சுடர் விளக்கின் முன் பிடித்து வெப்பப்படுத்துகையில் காகிதத்தில் கரிய எழுத்துக்கள் தோன்ற ஆரம்பிக்கும். உங்கள் பக்கதரும் புல்லரித்துப் போய்விடுவார்..............!

### *விளக்கம்.*

தேசிக்காய் சாற்றில் சிட்ரிக் அமிலம் காணப்படுகிறது. இது வெப்பமேற்றப்படும் போது கறுப்பாக மாறும் தன்மையுடையது.

அவசியம்.

### Some Tips 4 you

**வேகமான செயல்பாடு**

பேசிக் கொண்டே இருக்கும் போது நமது கைகள் பல்வேறு விதமான வேலைகளை செய்ய வேண்டும். அதற்கேற்றவாறு நமது செயல்பாடுகள் சற்று வேகமாக இருக்க வேண்டும். பேசிக் கொண்டே இருக்க வேண்டும், அதே நேரத்தில் நமது அடுத்த வேலை பற்றியும் சிந்தித்து திட்டமிட்டுக் கொண்டும் இருத்தல் வேண்டும். அதையொட்டி நமது கைகள் வேகமாக பல்வேறு வேலைகளை செய்ய முன் பயிற்சி அவசியம்.

**திட்டமிடல்**

நாம் நிகழ்ச்சியை துவக்கும் முன்னர் மேடையில் செய்ய வேண்டிய வித்தைகளை வரிசைப்படுத்தி குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வித்தை முடிந்ததும் காலம் கடத்தாமல் அடுத்த வித்தையை துவக்க வேண்டும். இடையில் வேறு ஏதாவது பணி செய்ய வேண்டியிருந்தாலும் சரளமாக பேசிக் கொண்டே இருக்க வேண்டும். திட்டமிடுதல் கூட ஒருவகையில் நிகழ்ச்சி வெற்றி பெறுவதற்கு காரணமாகும்.

---

## பறவைகளுக்கு மிட்டாய்

பிரேஸில் நாட்டில் காணப்படும் ஒரு தாவரம் மகரந்தச் சேர்க்கையை துரிதப்படுத்துவதற்கு ஒரு புதிய உத்தியைக் கையாளுகிறது. "கம்பி ரேட்டம் லான்ஸியோலேட்டம்" என்ற தாவரம் தன் விருந்தாளிகளுக்கு தேனமுத பானத்தை கொடுப்பதற்கு பதில் மிட்டாய்களை அள்ளி தருகிறது.

இரவு நேரத்தில் இந்தப் புதர்ச்செடியின் பூக்கள் இனிப்பான ஜெல்லியாக உற்பத்தி செய்கின்றன. அவை சுமார் 6mm விட்டமுள்ள வில்லைகளாக கெட்டியாகின்றன. குளுக்கோஸும் ஃப்ரக்டோஸும் இந்த ஜெல்லிக்கு இனிப்புச் சுவையைத் தருகின்றன. இதை சுவைக்கையில் கடையில் கிடைக்கும் ஒரு வித ஜெல்லியாகிய "ஜெல்லி பேபீஸ் போல" இருக்கும்.

பளபளப்பாக கண்ணாடிபோல் காட்சியளிக்கும் இந்த ஜெல்லி மிட்டாய்கள் பார்ப்பதற்கு ஒரு ட்ரேயில் அழகாக வைக்கப்பட்டிருப்பதைப் போன்று இருக்கும். இந்த மலர்கள் தரும் அமிர்தம் குறைந்தபட்சம் எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 28 பறவையினங்களை சுண்டி இழுக் கிறது. உணவுதேடி செடிக்குச் செடி பறக்கும் இந்தப் பறவைகளின் உடலெங்கும் மகரந்தத்தூள்கள் ஒட்டிக்கொள்ள இத்தாவரத்தின் மகரந்தச் சேர்க்கை துரிதமாய் நடைபெறுகிறது.

# பறநாஞரி... 5

*-பிரசாத்*

**ஜெட்** விமானங்கள் கடுகி விரைந்தன. புயற்காற்றில் பறக்கும் சருகுகளாக கீழிருந்த காட்சிகள் விரைந்து கொண்டிருந்தன. வேழத் தெழிலன் திரையை உயிர்ப்பித்தான். தான் திசைகுறித்த வரைபையும் ஜெட்டின் நகர்வையும் ஒப்பிட்டுப் பார்த்தவன் திருப்தியோடு தலையை அசைத்துக் கொண்டான். ஜெட்டின் தானியங்கியை இயக்கி அதன் பயணப்பாதைக்கு வரைபைக் கொடுத்துக் கட்டளைகளைக் கொடுத்தான். ஜெட் தன்னியக்கத்துக் கட்டளைகளைக் கொடுத்தான். ஜெட் தன்னியக்கத்துக்கு மாறியதும், தொலைத்தொடர்புக் கருவியை உயிர்ப்பித்தான். தொடர்பில் காவல் துறைக் கட்டுப்பாட்டுமையம் கிடைத் ததும் வணக்கம் சொன்னார்கள்.

“வணக்கம், TASA விலிருந்து வேழத்தெழிலன. உங்கள் அணி சம்பவ இடத்தை அடைந்தாயிற்றா?”

“..............................”

“நாம் இன்னும் சில நிமிடங்களில் அடைந்துவிடுவோம்”

“.........................”

“இருக்கலாம். ஆனால் நாம் தாக்குதல் நடத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என எண்ணவில்லை. வெளிக்கிரக ஊடுவல்கள் இதற்கு முன் இடம்பெற்ற போதும் அவர்கள் தமது தலையீட்டைத் தவிர்த்துக் கொண்ட மைதான் நிகழ்ந்தது”.

“........................”

“இப்போதும் அப்படித்தான் இருக் கும்.தம்மை நாம் அவதானித்தமையை அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளார் கள்.அனேகமாக அங்கே யாரும் அல்லது எதுவும் இருக்கப்போவ தில்லை என்பது எனது எண்ணம்.”

“...................”


“சரி நாம் இடத்தை அடைந்து விட்டோம். ஒகே மீண்டும் தொடர்புகொள்கிறேன் நன்றி”

“......................”

ஜெட்டின் மானிட்டர்திரையில் இலக்கை எட்டியமைக்கான எச்சரிக்கை சமிக்ஞை மின்னி ஒளிர்ந்து கொண்டிருந்தது. வேகம் குறைந்த விமானங்கள் தன்னியக்க விசையால் மெல்லச் சமநிலைக்கு வந்து கீழிறங்கத் தொடங்கின. இயந்திரத்தின் இயக்கவிசையில் அந்தரத்தில் இயக்க நிலையில் தரிக்கக்கூடிய அதி நுட்பத்தயாரிப்பு விமானங்கள் அவை. அவ்வாறே நின்றதும் வேழத்தெழிலன் பாய்ந்திறங் கினான்.

தலைக்கவசம் தரித்துப் பூரண முன்னெச்சரிக்கையுடன் இறங்கிய

அவனைத் தொடர்ந்து விரைந்து தாக்கும் படையணியின் ஏழுவீரர்கள் விரைந்து இறங்கினர். எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறன்வாய்ந்த அந்த வீரர்களை ஒருமுறை பார்த்த வேழத்தொழிலன் "வீரர்களே, அந்நியக் கிரக வாசிகளின் ஊடுருவல்கள் பற்றிப் பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். இருந்தாலும் அவதானமாயிருங்கள். இங்கே நாம் விடக்கூடிய சிறு தவறுகூட மனித இனத்தின் பாரிய அவலத்துக்கு வழி கோலிவிடகூடும். வந்திறங்கியவர்கள் நிச்சயமாக நம்மை விட மேம்பட்ட திறனுள்ளவர்கள். அவர்கள் பார்வை வீச்சில் மாட்டிக் கொள்ளாது இருக்க வேண்டும். வாழ்க தமிழ்" என்றான்.



அவர்களும் உரப்புக்குறைந்த உறுதி யான குரலில் "வாழ்க தமிழ், வளர்கதமிழ்" என ஒருமித்து ஒலித் தனர். மெல்ல ஒருவர் பின் ஒருவராக இயங்கத் தொடங்கினர்.

வேழத்தெழிலன் தன் கைக்கணினி யை இயக்கினான். ஏழு பேரதும் அசைவுகள் அதில் புள்ளியாகத் தென்பட்டது. செய்மதித்தகவல் தொடர் பைச் செயலறுநிலைக்கு கொண்டு வந்தவன் முந்தைய அனுபவம் செய் மதிக் கண்காணிப்பை அவர்கள் அறிந்து கொண்டு உருமறைப்புச் செய்வார்கள் என்பதை புலனாக்கிக் கொண்டான். ஒலிப்பதிகருவியை அக்ரிவ் செய்தான்.

வீரர்களை மீண்டும் ஒருமுறை எச்சரிக்கை செய்தான். அவர்கள் எழுவ ரும் திசைக்கொருவராய் பிரிந்து வட்டமாகி மெல்ல நெருங்கி வந்தனர். கதிர்வெளிப்படுத்து கருவியை உயிர்ப் பித்து சுற்றவர கதிர்க்கற்றையால் தேடினர். பூகோள இயற்கைக்குள் அடங்காத எவையாவது அதன் வீச்சில் படும்போது கதிர்ப்பாதை தடைப்படும். அதன் பாதை தடைப்படும்போது சமிச்ஞை கிடைக்கும். அதன் திசை வைத்து அந்நியத் தடையை இலக்காக்கி அதனை அடைய முடியும்.

*********

கண்களை மூடிக்கொண்டிருந்த முராரிக்கு பெரியவரின் நிலை புலனாகச் சில கணங்கள் சென்றது. உடலின் சிலிர்ப்பு நின்றதும், தன் தலைமேலிருந்த குருவின் கரத்தின் துடிப்பு ஓய்திருந்தமை புலனாகிற்று.

விழிகளைத் திறந்தவன் கண்களில் பெருகிய நீர காட்சியைக் கலைத்தது நாக்குழறியது. "குருவே, குருவே" என வார்த்தை தடக்கிற்று. இவன் தடுமாற் றம் ஏனையோருக்கும் பெரியவரின் பிரிவைச் சொல்லச் சூழ நின்றவர்கள் விம்மி வெடிக்கத் தலைப்பட்டனர்.

ஒரு கணம் தடுமாறிய முராரிக்குள் ஒரு தெளிவு ஏற்பட்டது. அவன் காதில் "குழந்தாய் கலங்காதே, யாம் உன்னு டனே இருக்கின்றோம். எமது பௌதி கக்கூட்டை அடக்கம் செய்யவேண்டிய ஏற்பாட்டைச் செய், இனி நீதான் குரு என்பதை நினைவில் நிறுத்திக் கொள்" என்று குருவின் குரல் ஒலித்தது. அவன் அணுக்கள் யாவும் ஒருமுறை சிலிர்த்துக் கொண்டன.

அமைதியாக எழுந்தான். குருவின் கரத்தை பத்மாசனமாக அமையுமாறு வைத்தான். சுற்றிவர ஒரு முறை பார்த் தான். சீடர்களும், அன்பர்களும் அழுது அரற்றிக்கொண்டு இருந்தனர். "அன்பர் களே நாம் அழக்கூடாது என்பதுதான் குருதேவரின் அபிலாஷை. மண்ணில் பிறந்த ஒருயிர்தானும் மனம் கலங்காது இருக்க வேண்டும் என எண்ணுபவர் அவர். எனவே நாம் கலங்கக் கூடாது. மேலும் குருதேவர் நம்மைவிட்டு எங்கும் செல்லவில்லை. நம்முடனே தான் இருக்கிறார்." என அமைதியாக உரைத்தான்.

இளமை துள்ளும் அவன் குரலில் வழமைக்குமாறாக கனிவு ததும்பியது. அந்தக் குரலில் குருதேவரின் தொனியே மேலோங்கியிருந்தது.

மற்றவர்கள் இதனை உணர்ந்து கொண்டனர். முராரி சிஷ்யகோடிகளுள் ஒருவரைப் பார்த்து "ஐயா ஒரு தீபம் தயார் செய்து வாருங்கள்" என்றான். பிரதம சீடராயிருந்தவர் அவனை நெருங்கி

"ஸ்வாமி, குருதேவர் தமக்கான முன்னேற்பாடுகளை ஏலவே கூறிவிட்டார். அவர் அமர்ந்திருக்கும் இடம் அதற்கேற்ப அமைக்கப்பட்டது தான். லிங்காயுதமரபின்படி தான் லிங்க வடிவிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பது அவர்கருத்து" என்றார்.

அப்போது தான் அந்த இடத்திலேயே ஒரு சமாதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதனைப் பார்த்தவன், கண்கள் ஒரு நொடிகலங்கின. "குருவேசரணம்" என்று சொல்லிக் கொண்டான். இதனுள் சீடன் விளக்கைக் கொண்டுவந்தான். "சற்று நெய்யும் கொண்டு வாருங்கள்" என்றவன்.

"அனைவரும் குருதேவரின் பௌதிக சரீரத்தை ஒருமுறை வணங்குவோம்" என்றவாறு அருகே தட்டம் ஒன்றில் இருந்த மலர்களை குருவின் பாதத்திலே வைத்து வணங்கினான். பிரதட்சணம் செய்தான். மற்றவர் களும் அவ்வாறே செய்தனர்.

அனைவரும் வணங்கியதும். "குருவே சரணம், குருவே சரணம்" என்றவாறு சமாதிக் கற்களை எடுத்து அடுக்கி ஆயத்தமாக, அருகே நின்ற ஸ்திபதியாரும் திரிபந்தனம் கலந்து சாந்து பூசிக்கொண்டே வந்தார். இறுதியாக விமானத்தளப்பீடம் வைத்தபோது மேலிருந்து ஒரு ஒளி சமாதியுள் இறங்கியது.

சமாதியின் முன்புறம் நெய்விளக்கை வைத்த முராரி, "குரு பிரம்மா, குரு விஸ்ணு குருதேவோ மஹேஸ்வரா குரு சாஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ" என்று சொல்லி வணங்க நெய்விளக்கு தானாக ஒளிரத்தொடங்கியது.

(வளர்வான்.)

---

## முரண்பாடு..

*"அன்றைய பாடங்களை*
*அன்றன்றே படியுங்கள்!"*
*அறிவுரை சொன்னேன்.*
*ஆறு வாரத்தின் முன் வைத்த*
*பரீட்சை விடைத்தாள்களைத்*
*திருத்தாமல்*
*வைத்திருந்தபடி!!*

## பிச்சை..

**ஒரு கையில்லாமல் ஒருவன்**
**வாசலில்**
**" ஐயா பிச்சை "!**
**ஒரு ரூபா போட்டேன் ஒரு கையால்,**
**மறு கையில் பதினொரு ரூபா**
**சிகரெட்!!**

***-மனிசன்***

நிலவு.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com

வெளியீடுகள்

A Member of Dream Solutions (Pvt) Ltd.

# பல்லூடக குறுவட்டுக்கள்

கம்ப்யூட்டர் info
கணினி - இணையம் - நுட்பம்

இப்பொழுது விற்பனையில்

140, Navalar Road,
Jaffna,
Sri Lanka.
T.P. 0714 801 391

275, யாழ் வீதி,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே : 0777 740413

email : sales@nilavu.com

தமிழ் மொழி மூல கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள் நாடெங்கும் விற்பனையில் உள்ளன.
நேரடியாக அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 0714 801 391

## MS Office -




## Desiging




## Multimedia

## Hardware -




## Programing

## e- Books -




## Others -




மற்றும்

சிறுவர்களுக்கான தமிழ் கற்க, கதைகள், படல்கள்....

நாடு முழுவதும் விற்பனையாளர்களும் விநியோகஸ்தர்களும் தேவை

இலங்கையில் பல்லூடககுறுவட்டுக்களின் முன்னோடிகள்
-- The King of Multimedia --

# வேண்டாமே சிறைச் சாலை

சிறை என்றாலே முகத்தை திருப்புகின்ற பலரைப் பார்த்திருப்பீர்கள். பலரது கருத்திற்கு முரணான என் கருத்தை இங்கு சொல்ல விளைவது உங்களை சிந்திக்க வைப்பதற்கே. யாரும் எதிர்பாராத தலைப்புடன் ஒரு சஞ்சிகை வெளிவந்து வியாபித்துள்ள நிலையில், அது என் இக்கருத்திற்கும் இடமளிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இக்கட்டுரையை வரைகிறேன்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படும், அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் இடமென சிறைச்சாலையை பார்க்கிறோம். ஆனால் அது எவருக்கும் புலப்படாத பூஞ்சோலை. வெளியில் இருந்து பார்க்கும் எமக்கு மட்டுமல்ல, உள்ளே இருப்பவர்களும் அதை ஓர் இருட்டறை என்றே எண்ணுகிறார்கள்.

சிறை வாழ்க்கை எப்போது கிடைக்குமென ஏங்கிக் கொண்டிருக்கும் எனக்கு அது ஒரு பசும்புல்வெளி போலவே காட்சிதருகிறது. பலரும் எண்ணுவது போல, அங்கு இருப்பவர்கள் அனைவரும் குற்றவாளிகள் அல்ல. ஒவ்வொரு குற்றத்திற்கும் சட்டங்களே தண்டனை வழங்கினாலும், எத்தனை சட்டம் மனம் என்னும் சொல்லுக்கு மதிப்பு கொடுக்கிறது.

கொலை செய்தால் மரண தண்டனை, ஆயுள் தண்டனை, வருடக்கணக்குப் போட்டு சிறைத் தண்டனை. தீர்ப்பு வழங்கும் போது கருத்தில் கொள்ளப்படுவது என்ன? குற்றம், கொலை செய்ததற்கான சாட்சிகள் மட்டுமே. கொலை செய்த ஒருவனிடம் ஏன் கொலை செய்தாய்? என்று எவரும் கேட்பதில்லை. குற்றம் செய்தான் என்பதற்கே தீர்ப்பு. ஏன் செய்தான் என்பதற்கல்ல. சட்டத்திலுள்ள ஓட்டைகளில் இதையும் சேர்க்கலாம்.

சட்டம் என்பது தண்டிப்பதற்காக அல்ல, குற்றம் செய்தவனை திருத்துவதற்கே, என்பதை எத்தனை பேர் புரிந்து வைத்துள்ளனர்? உதாரணமாக கொலை செய்தவனுக்கு மரணதண்டனை வழங்கி யாரை சட்டம் திருத்துகிறது? இவ்வாறு மரணதண்டனை வழங்குவது, எதிர்காலத்தில் எவரும் கொலை செய்ய மாட்டார்கள் செய்ய கூடாது என்பதற்கே, என நொண்டிச் சாட்டுச் சொல்லித்திரியும் அறிவு மேதைகள் பலர் உள்ளனர். மரண தண்டனை வழங்கும் சட்டம் இன்று நேற்று வந்ததல்ல. மனிதகுலம் தலைமைத்துவம் கொண்ட நாளிலிருந்து புழக்கத்தில் இருந்து வருகிறது.

**-தேனுகா**
**யாழ்ப்பாணம்.**

எனினும் இன்றும் கொலைகள் தொடர்வதற்கு என்ன காரணம் சொல்லப் போகிறார்கள் அந்த அறிவு மேதைகள்

ஒருவன் பிழை செய்கிறான் என்றால் அதற்கு தண்டனை வழங்குவது தகுந்ததல்ல. ஏனெனில், அவன் தண்டனை பெறும் போது மேலும் அவனது மனம் பாதிப்படைந்து சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் கொடூரமான பல செயல்களை செய்ய முனைவான். இதை நடைமுறையிலும் காணமுடிகிறது. எனவே தண்டனை என்பது தண்டிப்பதற்காக அல்லாமல் திருத்தும் சந்தர்ப்பத்தைக் கொடுப்பதாகவே அமையவேண்டும்.

தண்டனை வழங்கும் இடமே சிறைச்சாலை என்பதால், கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளால் அநாகரீகமான முறையில் தாக்கப்பட்டு சித்திரவதைப்படுகின்ற நிலைகளை, தட்டிக் கேட்கவோ சிந்திக்கவோ நம்மில் எவரும் முன்வருவதில்லை.

ஒருவன் ஒரு செயலை செய்கின்ற போது அது பிழை என்பதையோ அல்லது எதிர்கால விளைவைப் பற்றியோ சிந்திப்பதில்லை. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பம் அவனை அறியாமலே அவனில் மூர்க்கத்தனமாக வெளிப்படுகிறது. இதை பிழை என்று சொல்வதை விட உளவியல் தாக்கம் என்றே சொல்லலாம். சிறுவர்கள் குற்றம் செய்தால் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவது போல, சிறைக் கைதிகள் அனைவருமே திருத்தப்பட வேண்டியவர்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட்டால் ஒவ்வொரு கைதியினதும் தண்டனைக் கால முடிவிலும் நாட்டிற்கு ஒவ்வொரு நல்ல பிரஜையை அறிமுகப்படுத்த முடியும்.

'ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல் போகலாம் ஆனால் ஒரு நிரபராதியேனும் தண்டிக்கப்படக் கூடாது' என்பதுதான் சட்டத்தில் உள்ள முக்கியகொள்கையாகும். ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன? குற்றம் செய்தவர்கள் மட்டும் சிறைக்கு போவதில்லை. பலரின் சதி முயற்சிகளால் நிரபராதிகள் தண்டிக்கப்படுவது தாராளமாகவே நடக்கிறது. ஒரு பாடல் வரி ஞாபகத்திற்கு வருகிறது. "உள்ள உள்ள அத்தனை பேரும் குற்றவாளி இல்லீங்க, வெளியில் உள்ள அத்தனை பேரும் புத்தன் காந்தி இல்லீங்க". உண்மையை அப்படியே கொட்டியிருக்கிறார் கவிஞர்.

தொடருகின்ற இந்த அவல நிலைகளை மாற்ற முடியுமா? என்பது இன்றுமட்டுமல்ல என்றும் கேள்விக்குறியாகவே இருக்கும். எனினும் சில மனிதாபிமான, நேர்மையான செயல்களின் மூலம் ஓரளவு மாற்றியமைக்க முடியுமென நம்புகிறேன்.

ஒன்று, சட்டத்துறையில் இருக்கின்ற ஒவ்வொரு அதிகாரிகளும் எத்தனை குற்றவாளி தண்டனையில் இருந்து தப்பிக்கொண்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதுடன், 'கையாள்'

ஆகாமல் இருக்கவும் முயற்சிக்க வேண்டும்.

இரண்டாவதாக, கைதிகளை சித்திரவதை படுத்தவும் அவர்களை தவறான முறையில் கையாளவும் தமக்கு உரிமை இல்லை என்பதை சிறைச்சாலை அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது, கைதிகள் மனதில் இருக்க வேண்டியது. நாம் இருப்பது சிறைச்சாலை என்பதை முதலில் மறந்து விடவேண்டும். கைதிகள் எல்லோரும் ஒரு குடும்பமாக மாறிவிடுகின்ற போது அன்பும் பாசமும் உண்டாகும். ஒருவர் தவறான முறை யில் தண்டிக்கப்படும் போது மற்றவர் கள் தட்டிக்கேட்க முடியும். "ஒற்றுமையே உயர்வு" இது சிறைக் கைதிகளுக்கும் பொருந்தும். எல்லாம் இழந்து விட்டோம் என்று வருந்துவதை விடுத்து இருப்பவற்றைக் கொண்டே சிறைச்சாலையை பூஞ்சோலை ஆக்கிவிட முடியும்.

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என்ற ஒரு அறிஞரின் கருத்தை நினைவூட்டுகிறேன். ஒவ்வொரு சிறைச்சாலையையும் நூலகமாக மாற்றுகின்ற போது நாட்டில் குற்றவாளிகளோ, கைதிகளோ இருக்க முடியாது. அறிவு வளர்வதன் மூலம் குற்றச் செயல்கள் தானாகவே குறைந்து விடும். (குற்றம் செய்தால் படிக்க வேண்டும் என்றே பலர் குற்றம் செய்யமாட்டார்கள்...!) சிறைச்சாலை களை நூலகமாக்கும் இக்கருத்து யாருக்கு...............?

வேடிக்கை விடை தேடட்டும்.

*திருவாளர் பொதுசனம்*

*இது உங்கள் யாவரதும் சிந்தனைக்கு உரியது. வெறும் வேடிக்கை என்று எண்ணாது எண்ணத்தில் உதிததவற்றை தேனுகா போல நீங்களும் எழுதுங்கள். வேடிக்கை தரும் களத்தில் இது வாடிக்கை ஆகட்டும்.*

ஆ-ர்

---

நீதிபதி:- "கோப்பியில் விஷம் கலந்து அதை உன் கணவனுக்கு குடிக்க கொடுத்துள்ளாயே, அவன் மீது உனக்கு ஒருதுளிகூடவா இரக்கமில்லை"


அம்மணி:- "ஒரே ஒரு முறை இரக்கத்தோடு பார்த்தேன் மைலோட்"

நீதிபதி:- "அப்படியா? அது எப்போ?"

அம்மணி:-"கோப்பி ரொம்ப நல்லா இருக்கு இன்னொரு கப் கொடுக்கிறியா என்ற போது"

நீதிபதி:- என்ன??....

# குறுக்கெழுத்துப் போட்டி 6



எழுதுங்கள் வெல்லுங்கள்

*வேடிக்கை*
*140, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*முடிவுத்திகதி 16.10.2005.*

### இடமிருந்து வலம்

1) தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நிகழ்வு.
5) மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த இது!
6) பசு
7) கிளர்ச்சி செய்பவன் குழம்பியுள்ளான்!
9) துரிதகதியில் பொதிகளை கொண்டு சேர்க்கும் சேவை.
10) 'ஐந்து' வேற்றுமொழியில் உள்ளது.
11) சோர்வுற்றிருப்பதை ஆங்கிலத்தில் இப்படிசொல்வர்.
13) "பசித்தவனுக்கு மீனை கொடுப்பதைவிட்டு மீன் பிடிக்க கற்றுக்கொடுங்கள்" என்று சொன்னவர் .
15) பாத்திரங்களின் அழுக்கு நீக்கப் பயன்படும். மாறியுள்ளது.
16) முத்தேவிகளுள் ஒருத்தி, வீரம்மிக்கவள்

### மேலிருந்து கீழ்

1) அனைவரும் அனுமதியின்றி கலந்து கொள்ளகூடிய கூட்டம்.
2) பூமியை இப்படியும் அழைக்கலாம்.
3) வாயை நம்பி முதலீடின்றி தொழில் நடத்துபவர்.
4) சீட்டு விளையாட்டில் துருப்பு சீட்டை இப்படி சொல்வர்.
6) பகீரதன் பிரயத்தனப்பட்டது இதை பூமிக்கு கொண்டுவர..
8) காபன் அணுக்களின் கட்டமைப்பாலானது. வைரத்தின் முதல்நிலை.

10) போர்க்கால சூழலில் வியாபாரிகளுக்கு கைவந்த கலை இது. இறுதி இரு எழுத்துக்களுக்குஇடமில்லை.
12) சீதைக்காய் ராமன் முறித்தது தலைகீழாயுள்ளது.
13) பெண்
14) ஆங்கிலேயர்களால் வழங்கப்படும் ஒரு உயரிய பட்டம்.

## குறுக்கெழுத்துப் போட்டி -3 ற்கான விடைகள்.

### இடமிருந்து வலம்

1) கதிர்காமர், 5) பாரைன், 7) திவலை, 9) சுயமரியாதை, 12) கிஸ், 13) சுதி, 15) சுயம், 16) ரிஷபம், 17) சாவு.

### மேலிருந்து கீழ்

1) கன்னியாஸ்திரி, 2) திரை, 3) மலபார், 4) மந்திரி, 6) சிலை, 8) வயசு, 10) சுகி, 11) தைரியம், 14) திணிவு.

இப்போட்டியில் பலர் ஆர்வமுடன் கலந்து கொண்டிருந்த போதிலும் இருவர் மாத்திரமே மிகச்சரியான விடைகளை எழுதியிருந்தனர். எனவே அவர்கள் இருவருமே பரிசுக்குரிய வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். போட்டி கடுமையாயிருந்தால் அதிஸ்டத்தை மீறி உங்கள் திறமைக்கு நிச்சயம் பரிசு கிடைக்கும். தொடர்ந்து முயற்சியுங்கள். All the best

குறிப்பு:- விடைகளை அனுப்புவதற்கு சஞ்சிகையிலிருக்கும் பக்கத்தை கிழிக்கத் தேவையில்லை. அது போன்ற உருவை பிறிதொருதாளில் பிரதி செய்து விடைகளை பூர்த்திசெய்து அனுப்பினால் போதுமானது.

### குறுக்கொழுத்து போட்டி-3ன் வெற்றியாளர்கள்.

*ம. டண்ஷியா*
*3, கற்குழி, வவுனியா.*

*J.W. பிறெட்றிக் நோயல்*
*டச்சு வீதி, மானிப்பாய்.*

இவர்களுக்கான பரிசுகள் அவர்களது முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# விதிதேடிய விழிகள்

காலங்கள் போனது...
காற்றிலே தேடினாய்,
காதல் எனநினைத்தாய்,
காரிருளில் மறைந்தேன்!
திருட்டுபோன என்னுயிரை
திரும்பி நீயும் பார்க்கிறாய்,
திரும்பி வருவேன் நானே!
விரும்பிய காலங்களில்
விலகியே நடந்தேன்...
விதி தேடும் மதியாக - என்னை
விட்டுச்சென்றது என்னுயிர்!
கிளையிலிருந்து உதிர்ந்த மலராய்,
கிளிகள் பேசும் இனிய மொழியாய்,
கிணற்றிலிருந்து எழும்பும் ஒலியாய்,
விளங்காத தேசத்தில்
விதி எனும் விளையாட்டால்
விருப்பத்தை சொல்லிவிட்டு
விடைகூறி சென்றுவிட்டேன்..!
ஒருதருணம் சென்றுவிட்டேன்
ஒருகணம் எதிரினில் வருவாயா...?
உலகிலே நான் வாழவில்லை...!
இலையுதிர் காலம் - கிளைகளின் மரணமில்லை!
இனியவள் ஒருத்தி - வந்திடுவாள் உன்னை நாடி..!!!

ஆ. துவாரகா
புத்தளம்.

# கல்கியின் பார்த்திபன் கனவு..

## 5. மாரப்ப பூபதி

**வா**சலில் குதிரையில் வந்திறங் கியவன் திடகாத்திரமுள்ள யௌவன புருஷன் வயது இருபத் தைந்து இருக்கும். ஆடை ஆபரணங்கள் உயர்ந்த ராஜரீக பதவியைக் குறிப்பிட்டன. ஆசா பாசங்களிலும் மதமாச்சரி யங்களிலும் அலைப்புண்ட உள்ளத்தை முகக்குறி காட்டியது.

"சேனாதிபதி வரவேணும்" என்று சொல்லிக் கிழவன் வந்தவனை வர வேற்று உள்ளே அழைத்துக் கொண்டு வந்தான்.

"இனிமேல் என்னை அப்படிக் கூப்பிடாதே! நான் சேனாதிபதி இல்லை நான் மாரப்ப பூபதி இல்லை, நான் என் தகப்பனுக்குப் பிள்ளையே இல்லை!" என்று கோபமான குரலில் சொல்லிக் கொண்டு மாரப்ப பூபதி உள்ளே வந்தான். முற்றத்தில் ஏற்கெனவே கிழவன் உட்கார்ந்திருந்த பீடத்தில் அமர்ந்தான்.

"யுவராஜா ரொம்பக் கோபமாய் இருப்பது போல் தெரிகிறது!"

"யுவராஜாவா? யார் யுவராஜா? நானா? நேற்றுப் பிறந்த அந்தப் பரதைப் பயல் அல்லவா யுவராஜா? இளவரசர் விக்கிரம சிங்கர் வாழ்க! ஜய விஜயீபவ!"

என்று பரிகசிக்கும் குரலில் கூறிவிட்டு மாரப்ப பூபதி 'இழ இழ' யென்று சிரித்தான்.

சற்றுப் பொறுத்து, "அது போகட்டும், ஆச்சாரி! உன் சோழி என்ன தெரி விக்கிறது? அதைச் சொல்லு!" என்றான்.

வீரபத்திர ஆச்சாரி கொல்லு வேலை செய்ததுடன், சோதிட சாஸ்திரத்தில் வல்லவன் என்று பெயர் வாங்கி யிருந்தான். சோழிகளை வைத்துக் கொண்டு அவன் கணக்குப் போட்டு ஜோசியம் பார்ப்பது வழக்கம்.

"யுவராஜா! எதற்காக இந்தப் பிரமை உங்களுக்கு....?" என்று ஆரம்பித்தான் கிழவன்.

"அந்தக் கதையெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். நீ ஏதாவது பார்த்தாயா இல்லையா? வெறுமனே என்னை அலைக்கழிக்க உத்தேசமா?"

"பார்த்தேன் யுவராஜா! உங்களுக்கு என்ன வேணுமோ, கேட்டால் சொல்லுகிறேன்."

"முக்கியமான விஷயம் சண்டைதான். அதன் முடிவு என்ன

ஆகும்? இதைத் தெரிந்து சொல்ல முடியாவிட்டால் உன் ஜோசியத்தினால் என்ன பிரயோஜனம்? சுவடிகளையும் சோழிகளையும் தூக்கி நானே காவேரி ஆற்றில் எறிந்து விடுகிறேன்!" என்றான் மாரப்பன்.


"அப்படியே செய்துவிடுங்கள், யுவராஜா! எனக்கு ரொம்ப அனுகூலமாயிருக்கும். பாருங்கள்! என்னுடைய சொந்த விஷயத்தில் இந்த சாஸ்திரம் பிரயோஜனப்படவில்லை. ஒரே நாளில் குடும்பம் முழுவதும் அழிந்து விட்டது. குலத்தை வளர்ப்பதற்கு ஒரு பெண் குழந்தை தான் மிஞ்சியிருக்கிறது."

"வள்ளி சுகமாயிருக்கிறாளா, ஆச்சாரி?" என்று மாரப்ப பூபதி கேட்டான். அப்பொழுது அவன் முகத்தில் ஒரு விகாரம் காணப்பட்டது.

"ஏதோ இருக்கிறாள்" என்றான் கிழவன்.

"ஆமாம் பொன்னன் சண்டைக்குப் போய்விட்டால் வள்ளி என்ன செய்வாள்"

"அதற்கென்ன, யுவராஜா! வள்ளியைக் காப்பாற்றக் கடவுள் இருக்கிறார் இந்தக் கிழவனும் இருக்கிறேன்!"



என்று அழுத்திச் சொன்னான் வீரபத்திர ஆச்சாரி.

"ஆமாம், நீ இருக்கும்போது அவளுக்கு என்ன வந்தது? இருக்கட்டும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சண்டையின் முடிவு என்ன ஆகும்? உன் சோழிக் கணக்கில் ஏதாவது தெரிகிறதாயிருந்தால் சொல்லு இல்லாவிட்டால் உன் ஜோசியக் கடையைக் கட்டு!"

"கடையை அப்போதே கட்டிவிட்டேன் யுவராஜா! உங்களுடைய தொந்தரவினால்தான் மறுபடியும் அதைத் திறந்தேன்!"

"திறந்ததில் என்ன தெரிந்தது?"

"கிரகங்களின் சேர்க்கை ரொம்ப பயங்கரமான முடிவைக் காட்டுகிறது. சண்டையில் ஒரு பக்கத்துச் சேனை அடியோடு அழிந்து போகும். யுத்த களத்துக்குப் போனவர்களில் ஒருவராவது திரும்பி வர மாட்டார்கள். ஆனால் எந்தப் பக்கத்துச் சேனை என்று எனக்குத் தெரியாது."

"அது எனக்குத் தெரியும். எந்தப் பக்கத்துச் சேனை அழியும் என்று சொல்வதற்கு நீயும் வேண்டாம் உம் சோழியும் வேண்டாம். திரும்பி வராமல் நிர் மூலமாகப் போகிறது சோழ சைன்யந்தான். அந்தப் பெரும் புண்ணியத்தை–த்தான் உங்கள் பார்த்திப சோழ மகாராஜா கட்டிக் கொள்ளப் போகிறார்!"

"யுவராஜா! நீங்களே இப்படிச் சொல்லலாமா? நமக்குள் எவ்வளவு மனஸ்தாபங்கள் இருந்தாலும் பகைவனுக்கு முன்னால்...."

"யார் பகைவன்? பல்லவ சக்கரவர்த்தியா? நமக்குப் பகைவன்? இல்லவே இல்லை! சோழநாட்டுக்கு இப்போது பெரிய பகைவன் பார்த்திபன் தான். இவன் கையிலே வாள் எடுத்து அறியமாட்டான். வேல் வீசி அறிய மாட்டான்! இப்பேர்ப்பட்ட வீராதிவீரன் பல்லவ சைன்யத்துடன் போர் செய்யக் கிளம்புகிறான். பல்லவ சைன்யம் என்றால் லேசா! சமுத்திரத்தின் மணலை எண்ணினாலும் எண்ணலாம். பல்லவ சைன்யத்திலுள்ள வீரர்களை எண்ண முடியாது. காவேரியிலிருந்து கோதாவரி வரையில் பரந்து கிடக்கும் பல்லவ சாம்ராஜ்யம் எங்கே? ஒரு கையகலமுள்ள சோழ நாடு எங்கே? நரசிம்ம சக்கரவர்த்தி தான் லேசுப் பட்டவரா? நூறு யோசனை தூரம் வடக்கே சென்று ராட்சதப் புலிகேசியைப் போர்க்களத்தில் வென்று, வாதாபியைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டு வந்தவர், அவருடன் நாம் சண்டை போட முடியுமா? யானைக்கு முன்னால் கொசு!"

"யுவராஜா! இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்? மகாராஜாவிடம் சொல்வதுதானே?"

"மகாராஜாவிடம் சொல்லவில்லையென்றா நினைத்துக் கொண்டாய் கிழவா? சொன்னதன் பலன் தான் எனக்குச் சேனாதிபதிப் பதவி போயிற்று. மகாராஜாவே சேனாதிபதிப் பதவியையும் ஏற்றுக் கொண்டு விட்டார். சைனியத்தை அவரே நடத்திக் கொண்டு யுத்த களத்துக்குப் போகப் போகிறாராம்! தாராளமாய்ப் போகட்டும். இந்தப் பிரமாத

சேனாதிபதி பதவி இல்லையென்று யார் அழுதார்கள்?"

"அப்படியானால் யுவராஜா! நீங்கள் யுத்தத்துக்கே போகமாட்டீர்களோ?"

"நானா? நானா? என்னைக் கூப்பிட்டால் போவேன் கூப்பிடாவிட்டால் போகமாட்டேன் கிழவா! சண்டையின் முடிவைப் பற்றிச் சொன்னாயே, அதை இன்னொரு தடவை விவரமாய்ச் சொல்லு!"

"ஆமாம், யுவராஜா! ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் யுத்த

**"உன் கழுத்தை இந்த மாதிரி நெறித்துக் கொல்லுவேன்!"**

களத்தில் அழிந்து போவார்கள். ஒருவராவது உயிரோடு திரும்பி வரமாட்டார்கள்?"

"உயிரோடு திரும்பி வரமாட்டார்களா? பின் உயிரில்லாமல் திரும்பி வருவார்களோ? ஹா ஹா ஹா ஹா!" என்று மாரப்ப பூபதி உரக்கச் சிரித்தான். பிறகு, "ஆமாம் ஆமாம் நான் யுத்தத்தில் செத்துப் போனால் நிச்சயமாய்ப் பிசாசாகத் திரும்பி வருவேன் திரும்பி வந்து வள்ளியைப் பிடித்துக் கொண்டு ஆட்டுவேன்" என்று கூறி மறுபடியும் பயங்கரமாகச் சிரித்தான்.

சமையலறையிலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்த வள்ளி தன் இரண்டு கையையும் நெறித்து, "உன் கழுத்தை இந்த மாதிரி நெறித்துக் கொல்லுவேன்!" என்று முணுமுணுத்தாள். கொஞ்சம் காது மந்தமுள்ள கிழவி "என்ன சொல்லுகிற, வள்ளி?" என்று கேட்கவும் வள்ளி அவளுடைய வாயைப் பொத்தி, "சும்மா இரு!" என்றாள்.

"உள்ளே யார் பேசுகிறது?" என்று கேட்டான் மாரப்ப பூபதி.

"யார் பேசுவார்கள்? என்னைப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ ஒரு கிழப் பிசாசு – அதுதான் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கும்" என்றான் கிழவன்.

"சரி, எனக்கு நேரமாச்சு் போக வேணும். என் கிரக பலன்களைப் பற்றி நீ சொன்னதெல்லாம் நிஜந்தானே ஆச்சாரி! பொய் சொல்லி ஏமாற்றியிருந்தாயோ...!"

"தங்களை ஏமாற்றி எனக்கு என்ன ஆகவேணும் யுவராஜா!"

மாரப்ப பூபதி எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். முற்றத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களையும் வேல்களையும் கத்தி கேடயங்களையும் பார்த்து விட்டுச் சிரித்தான். "ஆஹா! ரொம்ப முனைந்து வேலை செய்கிறாயாக்கும்! கத்தி! கேடயம்! வாள்! வேல்! இந்த வாழைப்பட்டைக் கத்திகளையும், புல் அரியும் அரிவாள்களையும் வைத்துக் கொண்டுதான் உங்கள் பார்த்திப மகாராஜா, பல்லவ சக்கரவர்த்தியை ஜயித்து விடப் போகிறார்? நல்ல வேடிக்கை! ஹா ஹா ஹா" என்று உரக்கச் சிரித்துக் கொண்டே ஒரு பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களைக் காலால் உதைத்துத் தள்ளினான். அப்படியே வாசற் பக்கம் போனான்.

உலைக் களத்தில் கிளம்பும் அனற் பொறிகளைப் போல் கிழவன் கண்களிலே தீப்பொறி பறந்தது.

–கனவு வளரும்

# குறுந்தகவல் குறுந்தொகை

புது சேட்டு...
புது phone....
புது பைக்.....
ஓசி வேண்டினா
திருப்பி கொடுத்துடணும்
மச்சான்.!

முதலாங் கிளாஸ் பசங்க
எழுத்துக் கூட்டி படிப்பாங்க!
அஞ்சாங் கிளாஸ் பசங்க
வாய்விட்டு படிப்பாங்க!
பத்தாங் கிளாஸ் பசங்க
கண்ணுமுளிச்சு படிப்பாங்க!
பீர் கிளாஸ் பசங்க
இங்கிலீஸ்ல SMS பார்த்தா
இப்படித்தான் முழிப்பாங்க!!




செல் பேசும் வார்த்தைகள்
புரிவதில்லை.
காத்திருந்தால் SMS
வருவதில்லை.
ஒருமுறை அனுப்பி
மறுமுறை அனுப்ப
நானொன்றும்
கிறுக்கு இல்லை - காரணம்
செல் பில் கட்ட
வசதியில்லை!

கடவுளுக்கு SMS அனுப்பினேன்,
பதிலில்லை.
ஜனாதிபதிக்கு SMS
அனுப்பினேன்,
பதிலில்லை.
பிரதமருக்கு SMS அனுப்பினேன்,
பதிலில்லை.
உனக்கு SMS அனுப்பினேன்,
உடனே பதில் வந்தது!
நன்றி நண்பா,
கண்டு பிடித்துவிட்டேன்
வேலைவெட்டி இல்லாதவன்
நீ மட்டும் தானென்று!!!

சிறுவர் தொடர்

# பனிமலர்

1

- ஷ்யாம் சுந்தர் -

அரண்மனை எங்கணும் விழாக் கோலம் பூண்டிருக்க நாட்டு மக்களது உள்ளங்களில் மகிழ்ச்சிக்கடல் பொங்கி ஆர்ப்பரித்தது. அரண்மனை ஆலோசனைக் கூட்டத்திலிருந்த மூன்று உள்ளங்கள் மாத்திரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தன. வேறு யாரு மல்ல மங்களபுரி மன்னர் மங்கள சேனரும், அமைச்சர் மாப்பாணரும் சேனாதிபதி மகாசேனரும் தான். சேனாதிபதி இளைஞராதலால் அவர் ஞாபகத்தில் ஓர் எண்ணம் உடனே தோன்றிற்று. ஆனால்அதை மன்னரிடம் தெரிவிக்கத் தயங்கினார். இதை அவதானித்த மன்னர் "என்ன மகா சேனா உனக்கு ஏதாவது யோசனை தோன்றுகிறதா?" என்று கேட்டார்.

"ஆம், அரசே, பனிக்கண்டங்களில் இருக்கும் பனிமலரைக் கொண்டு வருவதே சிறந்த வழியாகத் தோன்றுகிறது". என்றான் மகாசேனன்.

அந்த ஆலோசனை எதற்கு என்ற எண்ணம் உங்களின் உள்ளத்தில் எழவில்லையா?

மன்னர் மங்களசேனர் தம்மொழி யாகிய தமிழ் மீது அளவற்ற பற்று டையவர். சங்ககாலம் தொட்டுத் தமிழ்ப்பாவலர்கள் பாடிய இலக்கி யங்களை தாம்பெற்று அவற்றை ஆராய வேண்டும் என்ற துடிப்புடை யவர். அதனால் ஒரு பழந்தமிழ் இலக் கியத்தில் காணப்பட்ட "பனிமலர்" என்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமலர்ந்து மறுமலர் மலரும் காலம் வரும்வரை வாடாமலிருக்கும் வினோதமலர் கேட்டதையெல்லாம் நிறைவேற்றும் என அறிந்தார். அது தம் சேனாதிபதிக்கு எப்படித் தெரிந் தது என நினைத்து அதிசயப்பட்டார்.

மூவரின் கவலைக்கும் காரணம், ஒரே வாரிசான இளவரசர் மதுசூதனன் கடுமையான வியாதியால் பீடிக்கப்பட டிருந்ததுதான். அவன் நோயைத் தீர்க கத் தங்களால் முடியாது என வைத்தி யர்கள் கைவிரித்து விட்டார்கள். இளவரசரைக் காப்பாற்றுவது எவ்வாறு என்பதுதான அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது.

மன்னர் மங்களசேனர் சேனாதிப தியை நோக்கி வினாவினார் "மகா சேனா! அதை இதுவரை எவரும் பறித்ததாக வரலாறு இல்லை. பனிக் கண்டத்திற்குள் நுழைந்து திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கைமிகக் குறைவு. அங்கே மந்திரவாதி கபால கண்டனின் ஆதிக்கம் நிலவுகின்றது. அதைக் கொண்டுவர யாரை

அனுப்புவது?'' இதையெல்லாம் சிந்தித்தாயா?"

அப்பொழுது மாப்பாணர் குறுக்கிட்டு "அரசே! அந்தப் பணிக்கு மகாசேனனையும் நமது நாட்டின் மந்திரவாதி வியாக்கிரகண்டரையும் அனுப்புவதே சிறந்ததென்று படுகின்றது" என்றார். "அரசே! எனது வீரத்தில் அமைச்சர் பெருமானுக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது" என்று மகாசேனன் வேதனையோடு கூறினான். மன்னர் அவனைத் தட்டிக் கொடுத்து "மகாசேனா! அமைச்சர் உன்வீரத்தை என்றும் குறைத்து மதிப்பிடுபவரல்ல. உன் வீரத்தை இந்த மங்களபுரி முழுவதுமே அறியும். ஆனால் மந்திரவாதியான கபாலகண்டனை எதிர்ப்பதற்கு மந்திரபலம் தேவை என்பதற்காகவே வியாக்கிரகண்டரை அனுப்பச் சொல்கிறார் அமைச்சர்.

நீ உனது பயணத்திற்குத் தயார் தானே!" என வினாவினார்.

மகாசேனனும் "மன்னர் பெருமானே! இந்த நாட்டிற்காக என்னுயிரையும் வழங்கச் சித்தமாயிருக்கிறேன். இளவரசருக்காக அவர் நலனுக்காக ஏற்படும் எந்தவொரு ஆபத்தையும் நான் இன்முகத்தோடு வரவேற்கிறேன். நாளையே புறப்படுகிறேன் என்னை ஆசீர்வதியுங்கள்" என்று வேண்டினான்.

"உன் பயணம் வெற்றியடைய இறைவன் துணையிருப்பாராக. உனக்கு என் கணையாழி மோதிரததைக் கொடுக்கிறேன். அதை காட்டி உனக்கு தேவையானவற்றைப் பெற்றுச் செல்" என்று தன் கணையாழியை அளித்தார் மன்னர். அதை மகாசேனன் பணிவோடு பெற்றுக் கொண்டான்.

கனத்த மனங்களோடு சந்தித்த மூவரிடமும் பிரியும் போது ஆறுதல் தென்பட்டது. மன்னர் தன் கவலையை ஓரளவு மறந்துவிட்டார் என்றே கூறலாம். தளபதியின் வீரத்திலும் விவேகத்திலும் அவ்வளவு நம்பிக்கை. மகாசேனன்



மறுநாள் பயணத்திற்கான ஆயத்தங்களைச் செய்தான். மந்திரி, வியாக்கிர கண்டரைப் புறப்படச் செய்யும்

# ராமனும் காந்தியும்

மே, 1936ஆம் ஆண்டு, பெங்களூர் அருகிலிருந்த நந்தி குன்றுகளுக்கு வந்திருந்த காந்தியைச் சந்திக்க சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த உயிரியலாளரும் ஒரு மதகுருவுமான டாக்டர் ரம் (Dr.Rahm) என்பவரை நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சேர் சி.வி.ராமன் அழைத்துச் சென்றிருந்தார். அப்போது நடந்த உரையாடலின் ஒரு பகுதி:

ரம்: உலகில் இத்தனை மதச் சண்டைகள் நடப்பது எனக்கு பெரும் குழப்பத்தையே அளிக்கிறது. இப்பூசல்களை முடிவுக்குக் கொண்டுவரவே இயலாதா.

காந்தி: அது கிருஸ்த்துவர்களின் செயல்களைப் பொறுத்தது. அவர்கள் மட்டும் மற்றவர்களுடன் சேர்ந்து வாழ மனம் வைத்தால்..! ஆனால் அவர்களுடைய தீர்வோ, கிருத்துவ மததை உலகில் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

ரம் இந்த பதிலை காந்தியிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. இதற்கு அவர் பதிலுரைக்கவில்லை. இன்னொரு கேள்வியை ரம் பதிலாகக் கேட்டார்:

'சரி நாம் ஒன்று சேரத்தான் முடியாது. இப்போது வளர்ந்துவரும் நாத்திகத்தையாவது ஒன்றாகச் சேர்ந்து எதிர்த்துப் போராடலாம் இல்லையா?'

அப்போது சி.வி.ராமன் இடையில் புகுந்தார்:

'உங்கள் கேள்விக்கு நான் விடை அளிக்கிறேன். கடவுள் என்று இருந்தால் நாம் நிச்சயமாக இவ்வண்டத்தில் அவரைத்தேட வேண்டும். கடவுள் இல்லை என்றால் தேடுவது வெறும் வீண்வேலை.

பலரும் என்னை நாத்திகன் என்றே நினைக்கிறார்கள். நான் அப்படி இல்லை. வானவியலிலும், பௌதீகவியலிலும் இப்போது தொடர்ந்து வரும் கண்டுபிடிப்புகள் கடவுளைப்பற்றிய தேற்றங்களாகவே எனக்குப் படுகின்றன. மஹாத்மாஜி, மதம் மனிதர்களை ஒன்று சேர்க்காது. அறிவியல் அப்படி அனைவரையும் முழுமையாக ஒன்று சேர்க்க ஒரு வாய்ப்பை அளிக்கிறது. அறிவியலாளர்கள் அனைவரும் சகோதரர்கள்.

காந்தி: அப்போது அதற்கு எதிர்மறை என்ன? அறிவியலாளர் அல்லாதோர் அனைவரும் சகோதரர்கள் அல்லர் என்பதா?

ராமனுக்கு இந்த நகைச்சுவை புரிந்துவிட்டது. அவர் சொன்னார்:

'அனைத்து மனிதர்களும் அறிவியலாளர் ஆகலாம், மகாத்மாஜி.'


# மலையாள கலைஞருக்கு 'தாதாபால்கேசாகிப்' விருது



இந்திய அளவில் சினிமாதுறையில் வழங்கப்டும் அதியுயர் விருது 'தாதாபால்கேசாகில்' விருது. நடிகர் திலகம் சிவாஜிக்கு காலம் தாழ்த்தி இவ்விருதை இந்தியமத்திய அரசு வழங்கியிருந்தது. அதன் பின் அவ்விருதை பெரும் தென்னிந்திய கலைஞர், மலையாள திரையுலகை சேர்ந்த ஆடூர் கோபாலகிருஷ்ணன், எட்டு வயது முதல் தன் நடிப்பு தொழிலை ஆரம்பித்த இவர் புனேயிலுள்ள பிலிம் இன்ஸ்ரிரியூட்டில் தன் கற்கையை முடித்து கொண்டு நடிப்பு, இயக்கம், கதை, வசனம் என பலதுறையிலும் தன்கைவண்ணத்தை காட்டியவர்.

இவரின் இயக்கத்தில் வெளியான எல்லாப் படங்களுமே பெரும் வெற்றியை பெற்றிருக்கின்றன. இவர் தயாரித்த முதல் படமான 'சுயவரமே' தேசிய விருதை பெற்றபடமாகும். இவரின் 'கொடியேற்றம்', 'அனந்தராம்', 'மதில்கள்', 'விதேயன்', 'நிழல்குத்து' போன்றன சர்வதேச அளவில் புகழ்பெற்ற படங்களாகும்.


மலையாள திரையுலகை பொறுத்தவரையில் 4 முறை தேசிய விருது பெற்ற ஒரே இயக்குணர் இவர்தான். தன்திறமைக்காக 1984 லேயே பத்மசிறீ விருதை பெற்ற இவருக்கு இந்திய மத்திய அரசு 2000ம் ஆண்டில் தாதாபால்கேசாகிப் விருதை அறிவித்திருக்கிறது.



## அசத்தும் ஆர்யா

புதுமுகமாக களமிறங்குகையிலேயே தன் நடிப்பால் பலரின் புருவங்களை உயர்த்த வைத்தவர் 'அறிந்தும் அறியாமலும்' ஆர்யா. தொடர்ந்து உள்ளம் கேட்குமே, ஒரு கல்லூரியின் கதை என பெயர் சொல்லும் படங்களில் நடித்த இவர் அடுத்து நடிக்கும் படம் இருபத்து நான்கு ரூபாய் தீவு. இது பிரபல எழுத்தாழர் சுஜாதாவின் கதையாகும். சினிமாவிற்காக இதன் தலைப்பு சிலவேளை மாற்றப்படலாம்.

# சிவாஜியில்..



இந்திய சினிமா உலகில் மிரட்டல் தயாரிப்பு எதுவென்றால் அது 'சிவாஜி' தான். படத்தை பூஜை போட்ட அன்றே 250 கோடிக்கு மேல் படம் வியாபாரமாகி விட்டது. இந்தி சினிமா உலக ஜாம்பவான்களை கூட இது அதிர்ச்சி யிலாழ்த்தியுள்ளது.

இந்தி முன்னணி தயாரிப்பாளரும் இயக்குனருமான ரங்கீலா, காக்கி போன்ற படங்களை தந்த ராம் கோபால் வர்மா ஒரு பேட்டியின் போது ''இந்திய அளவில் ஹீரோயிசம் உள்ள நடிகர் ரஜினிகாந்தான், நான் இயக்க விரும்பும் ஒரே கதாநாயகனும் அவர்தான்'' என்று கூறியிருக்கிறார்.

இப்படி பலரின் வியப்புகளுக்கும் மலைப்புகளுக்கும் காரணமான ரஜினியின் சிவாஜி படத்தில் அவருக்கிணையான இன்னொரு அகில இந்திய பிரபலமும் இணையக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆம், ஹிந்தித்திரையுலகின் எவர்கிறீன் சூப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன்தான் அந்தப் பிரபலம். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்காக வந்திருந்த அமிதாப் சிவாஜியில் நடிக்க தனக்கிருக்கும் விருப்பத்தை நேரடியாகவே ரஜினிக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். ஏற்கனவே மலைக்க வைத்திருக்கும் சிவாஜியின் வியாபாரம் இதன் மூலம் மேலும் எகிறப்போகிறது.

இதற்கிடையில் சிவாஜியில் கதாநாயகியாகும் வாய்ப்பு இந்தி ராணி முகர்ஜிக்கு அதிகமிருப்பதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன. 'ஹேராம்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்தவர் தான் இந்த ராணி முகர்ஜி.

## சாணக்கியாவில் சாகசம் செய்யும் வடிவேல்..

சுப்ரீம்ஸ்டார் நடித்து அண்மையில் வெளிவந்திருக்கும் படம் 'சாணக்கியா'. இதில் வடிவேலுவின் நகைச்சுவை பெரிதும்பேசப் படுகிறது. 'ஏய்' படத்திற்கு பின் சரத்குமார்-வடிவேலு- நமீதா இயக்குனர் வெங்கடேஷுடன் மீண்டும் கூட்டணி அமைந்திருக்கும் படம் இது. இப்படத்தில் வடிவேலுவின் நடிப்பை பார்த்து மெய்மறந்த இதன் நாயகிகளுள் ஒருவரான லயா வடிவேலுவை முத்தம் கொடுத்து பாராட்டியிருக்கிறார்.

# 5 இருளின் நாயகர்கள்

ஆக்ஷன் த்ரில்

-ஜேனா

*ஒரு பக்கத் தொடர்*

காவலர்கள் கடமைமாறும் விடயத்தில் கவனமாயினர்.

வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட ஊடுருவல்குழு வெகுவேகமாக தரையோடு தரையாக முன்னேறியது. முதலில் தென்பட்ட இடதுபுறமாய் அமைந்திருந்த களஞ்சிய அறை போல் காணப்பட்ட கட்டடத்துள் ரிச்சட்டும் ரமேசும் நுழைய அவர்களை தாண்டி கொண்டு ஏனையவர்கள் மேலும் முன்னோக்கி நகர்ந்தனர். திட்டப்படி 11 மணிக்குள்ளாக அவர்கள் தங்கள் இறுதி இலக்கினை அடைந்துவிட வேண்டியிருந்தது. இருப்பது இன்னும் அரைமணிநேரம் தான்.

அடையவேண்டிய இலக்குகளோ ஒவ்வொருவருக்கும் பலநூறு மீட்டர்களில் இருந்தது.


பல வெட்ட வெளிகள், தடையரண்கள், மின்வேலிகள் என ஏராளமான தடைகள் .

இருளரசனிற்கு துணையாக நிலவு விடுமுறை எடுத்துக்கொண்ட நாளானாலும் கூட செயற்கை நிலவுகளாய் சுழன்றடிக்கும் தேடுதல் வெளிச்சங்கள், ஏற்படக்கூடிய அபாயங்களை கட்டியம் கூறி நின்றன.

இருட்போர்வைக்கு தோதாக தம்மை உருமறைத்திருந்த போதிலும் தரையோடு தவளும் போது சீருடையை மீறி ஊறிவரும் ஈரமும் கூடவே ஊர்ந்துவரும் உயிரினங்களும் உடலில் அசைவை ஏற்படுத்தி எதிரிக்கு வெளிக்காட்டும் அபாயமும் இருந்தது.

ஆனாலும் சாதாரண மனித உடல்களை கொண்டவர்களாக அவர்கள் இல்லை. எறும்புக்கடிக்கும் சில்லிடவைக்கும் ஈரலிப்பிற்கும் இசைவாக்கப்பட்ட இரும்பு உடல்கள் ஆதலால் வெளித்தெரியாத அசைவுகளுடன் வேகமாக நகர்ந்தன உருவங்கள்.

அவ்வப்போது ஒளிப்படக் கருவி மட்டும் மேலே எட்டிப்பார்த்து சுழன்றபடி இருந்தது. இவ்வளவு அபாயங்களுக்கிடையிலும் இதன் அவசியத்திற்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் அவர்களின் உறுதியை புலப்படுத்தியது. வினாடிகள் நிமிடங்களாக நிமிடங்கள் மணித்துளிகளை நோக்கி விரைந்து கொண்டிருந்தன.



பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள அந்த எதிரியின் வலயத்துள் வெறுமனே ஏழு பேர் மட்டும் கொண்ட இந்த கொரில்லா கொமாண்டோ குழு என்ன செய்யப்போகிறது?

# சபலம்

-ஆரபி

நகரத்திற்கு வெகு அருகிலேயே அந்த ஆச்சிரமம் அமைந்திருந்தது. தள்ளாத வயதிலும் கூட அந்தக் குரு ஓடியாடித் தமது அலுவல்களைச் செய்து வந்தார். அவரது சீடர்களோ மிக இளைஞர்களாய் இருந்தனர். அதனால் சமையல் உட்படப் பலவற்றையும் குருவே கவனித்தார். சீடர்கள் அவருக்குக் கூடமாட ஒத்தாசை செய்தனர். ஆனால் அதற்கும் அவர்களுக்குச் சோம்பலாயிருந்தது.

ஒரு நாள் சீடர்கள் ஒன்றுகூடிக் குருவிடம் "குருவே! சமையலுக்கு மட்டுமாவது ஆள் போட்டுக் கொள்ளலாமே!"என்று வேண்டினர்.

"நம்மால் செய்யக் கூடியவற்றை நாமே செய்ய வேண்டும். அதுதான் எப்போதும் சிறந்தது!" என்றார் குரு.

"குறைந்த பட்சம் பாத்திரங்களைத் தேய்ப்பதற்காவது ஓர் ஆள் போடலாமே!" சீடர்கள் விடுவதாயில்லை.

அதற்கும் குரு சிரித்தார்.

"அவற்றிற்கு மட்டும் ஆட்கள் வருவதில்லை வந்தாலும் அவ்வளவு சுத்தமாயிராது."

"பாத்திரங்கள் தேய்க்கப் பெண்களை நியமிக்கலாமே!" சீடர்களின் கோரிக்கை தொடர்ந்தது.

"தேவையில்லாத தொல்லை! நீங்கள் வந்திருப்பது மன ஒருமைப்பாட்டிற்கு. இது நேர் எதிராக உங்கள் கவனத்தைச் சிதறடிக்கும். எண்ணங்களை அலைபாய வைக்கும்." என்றார் குரு.

"ஒரு வயதான பெண்மணியை நியமித்தால் கூடவா?" என்றான் ஒரு சீடன்.

குரு ஏதும் பேசவில்லை. அன்றிரவு அவர் சமைத்த உணவில் உப்பும், காரமும், எண்ணெய்யும் சற்றுத் தூக்கலாகவே சேர்க்கப்பட்டிருந்தன.

உண்டு முடித்துச் சீடர்கள் உறங்கச் சென்றதும் குரு மெல்ல எழுந்தார். கதவை வெளிப்புறம் பூட்டிக் கொண்டு எங்கோ சென்று விட்டார்.

நள்ளிரவு வேளையில் சாப்பிட்ட உப்பு வேலை செய்ய ஆரம்பித்தது. சீடர்கள் ஒவ்வொருவராக எழுந்தனர். வந்து கதவைத் தள்ளினால் அது வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. தட்டித் தட்டிப் பார்த்தனர். பின்னர் அறையின் உட்புறம் பார்த்தனர். எங்கும் தண்ணீர் இல்லை. உள் தொட்டியில் பாத்திரம் கழுவிய அழுக்கு நீர் மட்டுமே இருந்தது.

இதற்குள் பலருக்கு விக்கல் எடுக்க ஆரம்பித்தது. ஒருவன் தொட்டியில் கைவிட்டு மேலாகத் தெளிந்திருந்த நீரை அள்ளிப் பருகினான். அதைப்

பார்த்து அடுத்தவன் மேலோட்ட மாகக் கையால் அள்ளினான். அவனைப்பின்பற்றி இன்னொருவன்....இப்படியே மாற்றி மாற்றி அள்ளிப்பருகவே நீரும் கலங்கிப்போய், அதற்குள் இவர்களுக்கும் அது பழகிப்போய், அதையே குடித்து அந்தத் தொட்டி நீரும் தீர்ந்துவிட்டது.

மறுநாள் காலை எல்லோருமாகச் சென்று தாங்கள் பட்ட கஷ்டத்தைக் குருவிடம் கூறினார்கள்.

குரு சிரித்தார்.

"கொஞ்ச நேரம் தொண்டை வறண்டு போனதுமே அழுக்குத் தண்ணீரையே குடிக்கத் தயாராகி விட்டதே உங்கள் மனம்! இந்நிலையில் வயதான ஒரு பெண்ணை வேலைக்கமர்த்தினால் என்ன நேரிடும்? தாகத்திற்கு எது கிடைத்தாலும் போதும் என்ற நிலையிலல்லவா உங்கள் மன உறுதியை வைத்திருக்கிறீர்கள்."

சீடர்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

**திடமனது எந்நிலையிலும் தடுமாறுவதில்லை. சலன சித்தம் தன் செயலுக்கு நியாயங்களைத் தேடி அலையும்.**

---

# உலகின் சின்னஞ்சிறுசு.

இரண்டே சென்டிமீட்டர் நீளமுள்ள "உலகின் சின்னஞ்சிறு பல்லி" டொமினிகன் குடியரசுக்கு சொந்தமான ஹாராகுவா தேசிய பூங்காவிலுள்ள குகை ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் உடல் எடையுடன் ஒப்பிடுகையில், இதன் புறப்பரப்பளவு மிக அதிகமாயிருப்பதால் நீரிழப்பு ஏற்படும் ஆபத்து இருப்பதாக அஞ்சப்படுகிறது. இது பல்லி இனங்களில் மட்டுமே சின்னஞ்சிறுசு அல்ல, ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என 23,000 இனங்களின் தொகுதியாகிய ஏம்னியாட்டிஸ்களிலேயே மிகச் சிறியது ஆகும்.

இந்தச் சின்னஞ்சிறு பல்லியின் சைஸுடன் போட்டிக்கு நிற்பது பிரிட்டிஷ் வெர்ஜின் தீவுகளில் வசிக்கும் பல்லி இனம் மட்டுமே.

கரிபியன் தீவு சின்னஞ்சிறு சிட்டாகிய தேன்சிட்டுவைக் குறித்தும் மார்தட்டிக் கொள்கிறது. இதன் நீளம் ஐந்து சென்டிமீட்டர். அதோடுகூட படுஒல்லியான பாம்பைக் கொண்டிருப்பதிலும் கரிபியன் தீவுக்குப் பெருமையே. இது வெஸ்ஸர் ஆண்டில்லியன் திரெட் ஸ்நேக் ஆகும். பென்ஸிலில் இருக்கும் கார்பன் குச்சியை நீக்கிய பின் அந்த துவாரத்தின் வழியாக இந்தப் பாம்பால் வளைந்து நெளிந்து உள்ளே செல்ல முடியுமெனில், இது எந்தளவுக்கு ஒல்லியாக இருக்குமென நீங்களே புரிந்து கொள்ளுங்களேன்.

# ஓவியமும் காவியமும் - 04

இந்த இதழுக்கான ஓவியம்




16.10.2005 இற்கு முன் அனுப்பி வையுங்கள்

வேடிக்கை
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

*பெண்மை*
*உன்னை அழகு தேவதை*
*என்றான் - உன்*
*வதனம் என்னை*
*வாட்டுதென்றான் - ஆசை*
*காட்டி அன்பை வளர்த்து*
*தாலிக்கு கூலி தாவென்றான் - இதனால்*
*தனியாக நீ தவிப்பது தான்*
*பெண்மை பெற்ற வரமா?*

அ. ராஜரூபினி
யாழ். பல்கலைக்கழகம்.

*பெண்ணே!*
*வார்த்தைக்குள் அடக்க*
*உன்*
*வாழ்க்கையென்ன*
*வரி விளம்பரமா.....?*

-சஜீபன்


## ஓவியமும் காவியமும் - 02

*கண்ணே கயல் விழியே*
*என் உள்ளத்தை வெட்டும்*
*மின்னலே மீன் விழியேயென,*
*வஞ்சியுனை வாழ்த்திசைக்கும்*
*வஞ்சகரை நம்பாதே!*
*விழிகளை மீனென்பது*
*அழகினை ஆராதிக்கவல்ல....*
*"நீரின்றி மீனில்லை"*
*அது போலுன்*
*விழிமீன்களையும்*
*(கண்)ணீரில் மூழ்கவைக்கவென*
*புரிந்து கொள்...!*

M. விஜி, வட்டுக்கோட்டை

கண்களால் வலைவீசியும்
பொன்களால் விலை பேசப்படும்
அழகுப்பதுமையும் நானே!
வண்ணங்களை பூசிக்கொண்டு -
சுயஎண்ணங்களை புதைத்துக் கொண்ட
எழில் ஏந்திழையும் நானே!!
விடியலுக்காய் காத்திருக்கிறேன்
விலங்கொடிக்க வருவீரோ
வீரர்களே.....!!!

-சிந்துஜா, கொழும்பு.



# வாசகர் முகங்கள்

ஆசிரியர் அவர்கட்கு,

வேடிக்கையின் வெளிப்பாடுகள் அனைத்தும் பிரம்மாதம். பாராட்டு தற்குரியவை. "சுடுவான் தரும் நெத்தியடி" பகுதி நமது சமூகத்தை வளப்படுத்தும் ஒருஉன்னத வடிவமே. எவ்வளவுதூரம் இவற்றையெல்லாம் எமது சமூகம் சீர்தூக்கி பார்க்கும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இப் பகுதியில் தாங்கள் சுட்டிக்காட்டும் பிரச்சனை/விடயம் தொடர்பாக வாசகர்கள் எந்தவகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்ற தகவல்களையும் கொடுத்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.

**அ. நிதர்சன், உசன்.**

வளர்பிறையாய் இருந்த வேடிக்கை 4வது இதழில் தேய்பிறையாகி விட்டதேன்?

பக்கவடிவமைப்பில் கொஞ்சம் சிரத்தை எடுங்கள். நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெட புழுதியில் வீசலாமோ? தரமான விடயங்களானாலும் தாங்கிவரும் தாள்களும் தரமானதாயிருந்தால் தான் அதுதன் இலக்கை அடையமுடியும். தவறுகளை திருத்திக் கொண்டு தொடருங்கள் உங்கள் பணியை.

**சி.கே.ஆனந்தராஜா**
**(ஓய்வுபெற்ற அதிபர்),**
**வடலியடைப்பு.**

"காதல்" குட்டிக் கதையாக இருந்தாலும் பல ஆணாதிக்க சிந்தனையாளர்களை "குட்டி" கதை சொல்வதாயிருந்தது. சுவாரஸ்யமாக நகர்ந்த கதை முடிவில் மனதில் சுமையேற்றிவிட்டு சென்றுவிட்டது. பாராட்டுக்கள் ராகவி.


**வி.பரந்தாமன்,**
**வெள்ளாங்குளம்.**

அருமை, அருமை இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ள இளையதளபதிகள் எனும் பகுதி வெகுஅருமை. கடந்த இதழில் வெளியாகிய சாதனையாளர்கள் நால்வருடனான சந்திப்பு ஏனைய பல மாணவர்களுக்கு தங்களை வளர்த்துக் கொள்ள பெரிதும் உதவிடும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான பகுதிகள் தடையின்றி தொடர வாழ்த்துக்கள்.

**S. சிவானுஜா, கரவெட்டி**



# வலை வீசி....



## மாதிரி சந்தாப் படிவம்

வேடிக்கை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

ஆறு மாதம் ☐ ரூ. 400 ஒரு வருடம் ☐ ரூ. 800

இனை செலுத்துகிறேன்.

பெயர் : ..............................................

முகவரி : ..............................................................

..............................................................

தொலைபேசி : ..............................................................

நான் இத்துடன் .......................................... இலக்க காசுக்கட்டளையை வேடிக்கை என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திகதி:.............................. கையொப்பம்:................................

---

குறிப்பு: பணத்தினை நேரிலோ அல்லது காசுக்கட்டளையாக வேடிக்கை என்ற பெயரிற்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வேடிக்கை,
140,நாவலர் வீதி, யாழ்பாணம்.

இந்த சஞ்சிகை Dream Solutions (Pvt) Ltd. நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 140 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அவர்களின் பணிமனையில் 02-10-2005 இல் வெளியிடப்பட்டது.


DSI Samson group

PRODUCTION ISO 9002 CERTIFIED

யாழ் மண்ணில் உங்களுக்காக..

தரமான கால் துடைப்பான்கள்

# Heavy Duty Mats







Domino Mats

Nova Mats

Honeycomb Mats





Mat Connector

Bottom Side

யாழ் பிரதேசமுகவர்

## Ranpa & DSI Tyres

No13, Modern market (Upstairs),

Hospital Rd, Jaffna.

Tel:021-222-7621